REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி கார்த். கஉ (காந்தி ஆண்டு 80) 28-11-'48, ஞாயிறு | இதழ் 19

கணக்குப் பதிவு நூல்
BOOK-KEEPING
in Tamil
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்
க. நவரத்தினம் F.C.I.(Eng.)
அவர்களால்
மாணவர்கட்கும்
வியாபார ஸ்தாபனங்கட்கும்
உபயோகப்படக்கூடிய முறையில்
விரிவாக எழுதப்பட்டுளது
விலை ரூபா 3.50..... தபாற் செலவு சதம் 50.
தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம்

# புதுமைப் பெண்கள் பணி

## நகரசபைத் தேர்தல்

**யாழ்ப்பாணம் புத்தாண்டுடன் நகரசபை அந்தஸ்தைப் பெறுகின்றது. இதற்கான புதிய பொதுத் தேர்தலின் அமளி சென்ற மாதமே தொடங்கிவிட்டது. அடுத்த மாதம் முற்பகுதியிற் பல்வேறு வட்டாரங்களின் தேர்தல்கள் ஆரம்பமாகி நடைபெறும்.**

**அரசாங்கம் இதற்கான சகல ஒழுங்குகளையும் நுணுக்கமாகச் செய்துவருகின்றது.**

**தினமொன்றுக்கு மூன்று** வட்டாரங்களிலே தேர்தல்கள் நடைபெறும். வாக்காளர்களின் வசதிகளுக்கேற்ப அவ்வவ்விடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும். வாக்காளர்கள் அதிகமாகவுள்ள வட்டாரங்களில் மூன்று நிலையங்கள் நிறுவுவதெனவும் திட்டம் போடப்பட்டிருக்கின்றது.

மாற்றம் அடைந்துகொண்டு வரும் யாழ்ப்பாணம், நகரசபைத் தேர்தலுடன் பழைய சம்பிரதாயங்களையும் தகர்த்தெறிய முற்பட்டுவிட்டது. சாவகச்சேரி போன்ற பட்டினசங்கத் (Town Council) தெரிவிலேயே இது ஆரம்பமாயிற்று. அதாவது அரசாங்கம் இததேர்தல்களுக்குப் பெண்மணிகளின் சேவைகளையும் பெற்றுள்ளது. ஆகவே, தேர்தல் அதிகாரிக்கு உதவியாகப் பெண்மணிகள், லிகிதர்களாகவும், பெண் வாக்காளர்களுக்குவேண்டியவிபரங்களைக் கூறும் உத்தியோகஸ்தர்களாகவும் பணியாற்றுவார்கள். இவர்கள் வாக்குகளை எண்ணிக் கணக்கெடுத்து வெற்றி தோல்வியை வெகு விரைவாகக் காண்பதற்குப் பயிற்சி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்து நகரசபைத் தேர்தல்களிற் பெண்மணிகள் அதிக தொகையினராகப் பணியாற்றுவார்கள் எனத் தெரிகின்றது. முஸ்லீம் வட்டாரத்திலுள்ள பெண்கள் வாக்களிக்கும் நிலையத்திற் தேர்தல் அதிகாரிக்குச் சகல அலுவல்களையும் பெண்களே செய்வார்கள். இவர்களுக்குச் சகல வசதிகளும் உதவப்படும். பிரத்தியேக மோட்டார் வண்டிகளில் இப்பெண்மணிகள் குறித்த நிலையங்களுக்குச் சென்று திரும்புவார்கள்.

தேர்தல் நடைபெறும் நாட்களிற் சண்டித்தனம், வெறியாட்டம் போன்ற குழப்பங்கள் ஏற்படாமற் பார்த்துக்கொள்வதற்குப் பொலிஸார் சிரத்தையெடுப்பார்கள். இது விஷயத்திற் பிரதம பொலிஸ் அதிகாரி அபேட்சகர்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

ஆள் மாருட்டம் ஒரு பாரதூரமான குற்றமாகையால் மக்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் முரசறையப்படும்.

**தேர்தல் வெற்றிகளையறிய** முன்னரே ஒருசிலர் யாழ்ப்பாணத்தின் முதலாவது, மாநகர் மன்றத் தலைவர் (மேயர்) பதவியைப் பெற்றுக் கொள்வதற்குப் படம்போட்டு வருகின்றனர். வழக்கறிஞர் சாம் சபாபதி அவர்களுக்கும் இதில் ஒரு கண் இருக்கின்றது. ஸ்ரீமான்கள் ஸி. பொன்னம்பலம், ஆர். ஆர். நல்லையா என்பவர்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுவார்களாயின் அவர்களும் மேயர் பதவிக்குப் போட்டியிடக்கூடும். வழக்கறிஞர் நல்லையா அவர்கள் கோட்டை வட்டாரத்தின் பிரதிநிதியாக வெற்றிபெறுவார் என நம்பப்படுகின்றது. சமீபத்தில் ஸ்ரீ ஸி. பொன்னம்பலம் நிகழ்த்திய தேர்தற் சொற்பொழிவைக் கவனிக்கும்போது அவரும் ஏதே ஒருவிதமாக வெற்றி பெற வழி தேடுகின்ருர் என்பது தெளிவாகிவிட்டது.

தமிழ்க் காங்கிரஸ் சார்பிற் போட்டியிடும் அபேட்சகர்களில் அதிகமானேருக்கு வெற்றி கிடைக்குமாறுல் ஸ்ரீ சாம் சபாபதி யாழ்ப்பாணத்தின் முதலாவது மாநகர் மன்றத் தலைவர் பதவியை இலகுவாகத் தட்டிக்கொள்ளுவார்.

**வாசகர்களுக்கு நகரசபை** பட்டினசபை, நகரசங்கம் என்றவுடன் மலைப்பு உண்டாகலாம். எல்லாம் ஒன்றுதானே எனவும் பலர் கருதலாம். ஆகவே இவற்றைக் கவனித்தல் நன்று. நகரசபை—Municipality; பட்டினசபை—Urban Council பட்டினசங்கம்—Town Council.

# யாழ்ப்பாணத்துச் 'சிகரெட்'

## உரும்பராயிலே தொழிற்சாலை

**யாழ்ப்பாணம்** சுருட்டுத் தொழிலுக்குப் பெயர்போனது. யாழ்ப்பாணச் சுருட்டுக்கு மலாயாவிற்கூட நல்ல மதிப்பு இருந்துவருகின்றது. தென்னிலங்கையிலும் யாழ்ப்பாணச் சகோதரர்கள் சுருட்டுக் கடைகள் வைத்துப் பணம் சம்பாதித்து வருதல் கண்கூடு.

இவ்வளவு மதிப்பு யாழ்ப்பாணச் சுருட்டுக்கு இருந்துவருகின்ற போதிலும் 'சிகரெட்' என்ற நாகரிகச் சுருட்டுடன் யாழ்ப்பாணச் சுருட்டு போட்டிபோட முடியவில்லை. சிகரெட்டின் மணமுங் குணமும் அநேகரை மயக்கிவருகின்றது.

இங்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒரு சிகரெட் தொழிற்சாலை நிறுவப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உரும்பராய் என்ற இடத்தில் இந்த ஸ்தாபனம் சில மாதங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. இப்போது 'சிகரெட்' தயாரிக்கப்பட்டு கண்டி போன்ற பிறவிடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற தென்ற செய்தி அநேகருக்கு உண்மையாகவே ஒரு புதினமாகவிருக்கும்.

இயந்திர சாதனங்களின் உதவியுடன் இங்கு 'சிகரெட்' தயாரிக்கப்படுகின்றன. நிமிஷம் ஒன்றுக்கு இந்த இயந்திரம் 800 சிகரட்டுகளை அப்படியே அளவாக நறுக்கி நறுக்கித் தள்ளுவதைப் பார்த்துக்கொண்டு நிற்பதே ஒரு ஆனந்தமாகும்.

சுத்தமாகக் கிடைக்கும் சிகரெட்டுகளை அளவான சிறு கடதாசிக் கூடுகளிற் போட்டு அடைக்கும் வேலைகளைப் பெண்மணிகள் செய்கின்றனர். இந்த ஸ்தாபனம் வளர்ச்சியுறுமாயின் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில பெண்மணிகளுக்கும் உழைப்பாகிவிடுமென்பது திண்ணம்.

அரசாங்கம் நடாத்தும் தோட்டங்களிற் பயிரிடப்படும் 'உவைற்பேளி' என்ற புகையிலையே இப்போது உரும்பராயிலே தயார்செய்யப்படும் 'சிகரட்'டுக்கு உபயோகமாகின்றது. பதம்பண்ணப்பட்ட இப் புகையிலையை 'சிகரெட்'டுக்கு ஏற்ற முறை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# வெளுத்து வாங்கினர் கொழும்பு—நிருபர் கடிதம்—



## சபையில் வெங்காயங்கள்!

25–11–48

**நீண்டகால ஓய்வுக்குப் பின்னர் பிரதிநிதிகள் சபை மீண்டும் செவ்வாய்க்கிழமை கூடிற்று. சீமை சென்று திரும்பிய பிரதமர் சேனநாயகா மிக குஷியான பேர்வழியாகவே காணப்பட்டார்.**

**அமைதியான** ஒரு சூழ்நிலை சபையின் கண் ஆரம்பத்தில் நிலவியிருந்த விடத்தும், சாயங்கால வேளையில் நிலைமை அகோரமாகிக் கொண்டு வந்தது. 1947-ம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்தவர்கள் குறித்தவோர் கால எல்லைக்குள் மீண்டும் வேலைக்குத் திரும்பாத காரணத்தால், அவர்கள் பாடு எக்கச்சக்கமாகி விட்டது. இதுபற்றி விவாதம் ஏற்பட்டபோது எதிர்க்கட்சியினருக்குப் புண்ணிலே புளிப்பற்றியமாதிரியிருந்தது.

### மானத்தைக் காத்தார்

கொழும்பு தென் பகுதி உபதேர்தலில் வெற்றி மாலை சூடிய யூ. என். பி. பிரதிநிதி மேஜர் ஜயவர்த்தன அன்று சபையிலே விசுவாசப் பிரமாணஞ் செய்து [illegible] சண்டை சள்ளுகளு[illegible] இந்த உபதேர்தலின் ஸ்ரீ ஜயவர்த்தன யூ. என். பி. யின் மானத்தைக் காப்பாற்றி வைத்தார். அப்படியிருந்தும் அவர் தமது ஆசனத்தில் அமர்ந்த போது அவருடைய சகாக்கள் கூட அதிகமாக ஆரவாரஞ் செய்யவில்லை.

இந் நிலையிற் 18-11-48ல் நான் எழுதிய கடிதத்தில் ஒரு சிறு பகுதியை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அக்கடிதத்தில் யூ. என். பி. அபேட்சகருக்கே வெற்றி கிடைக்கலாமெனவும், ஸ்ரீ சரவணமுத்து அவர்களும் உற்சாகமாகக் காணப்படுகின்ருர் எனவும் எழுதியிருந்தேன். அதே போன்று மேஜர் ஜய வர்த்தன வெற்றி பெற்றுள்ளார். இனி, சென்றவாரக் கடிதத்தைக் கவனிப்போம்:

"தேர்தல் வேகத்தை இவ்வாரம் கவனிக்கும்போது யூ. என். பி. அபேட்சகரே வெற்றிமாலை சூடுவோர் போலத் தோன்றுகின்றது. ஸ்ரீ பி. சரவணமுத்து அவர்களும் திட சித்தத்துடன் உற்சாகமாகக் காணப்படுகின்ருர்."

ஈழகேசரி 21-11 48

### பிரதமர் சாட்டை

[illegible] அழைத்துச் செல்லுகின்றேன்.

அன்று, சபையிலே பிரமுகர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த 'கலரி'யிற் சர்வதேசத் தொழிற்சங்கத்துப் பிரதிநிதிகளும் வீற்றிருந்தனர். விவசாயம் சம்பந்தமாக பிரதமர் சேனநாயகா வெளுத்து வாங்கிய போது எதிர்க்கட்சித் தலைவரெனப் பேசிக் கொள்ளப்படும் டொக்டர் என். எம். பெரேராவுக்கு நல்ல சூடு கொடுத்தார். நாட்டுக்கு நலன் தரும் திட்டத்தைப்பற்றி அந்த டாக்குத்தர் நன்கு தெரிந்துகொள்ள மறுக்கின்ருர் என பிரதமர் சுவையாகப் பேசினுர்.

அத்துடன் பிரதமர், காலிப் பிரதிநிதி தஹநாயகா அவர்களுக்கும் வெங்காயப் பிரச்சினைபற்றிச் சிறிது விளக்கி வைத்தார். கொல்லைப்புறத்தே விளையும் வெங்காயங்கள் பிரதிநிதிகள் சபையில் இடம் பெற்றபோதிலும் அவை நாற்றம் எடுக்கவில்லை!!

பெண்மணிகள் போதிய வெங்காயமின்றிக் கஷ்டப்படுகின்றனர் என ஸ்ரீ தஹநாயகா பிரலாபித்தார். "கொல்லைப்புறத்தில் பெண்கள் இரண்டு பாத்தியைப் போடுவது தானே" என்று பிரதமர் சுடச்சுடப் பதில்கொடுத்தார்.

### பழங்கதை

சென்ற வருடம் நடைபெற்ற பெரிய வேலைநிறுத்தத்தைப் பற்றியும் அதன் நிமித்தம் வேலையை இழந்தவர்களைப்பற்றியும் பேச்சு எழுந்தபோது பிரதமர் சேனநாயகா வெற்றிவீரனைப்போல நின்று சொற்பெருக்காற்றினுர். குறித்த வேலைநிறுத்தம் சென்ற வருடம் மே, ஜூன் மாதங்களில் நடைபெற்ற சம்பவம் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தப் பழங்கதையையும் அதனுல் ஏற்பட்ட பரம சங்கடங்களையும் பிரதமர் ஒவ்வொன்ருக எடுத்துக் கூறும்போதுதான் எதிர்க்கட்சியினருக்கு விறுவிறுப்பாக இருந்தது. ஸ்ரீ சேனநாயக ஒரு மணித்தியாலம்வரை பிடிகொடாமற் பேசினுர். கலரியிலிருந்த சர்வதேசத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் சபையைவிட்டு வெளியேறும்போது பிரதமரின் சாமர்த்தியத்தைப்பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டே சென்றிருப்பார்கள்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயா அன்பர் அபிப்பிராயம்

ஈழகேசரியின் உயர்ந்த கொள்கைகளை, அலை கடலுக்கு அப்பால் இருந்துகொண்டு கவனித்துவரும் அன்பர்களில் ஒருவரான திரு. வே. தம்பு இதனை எழுதியுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். குவாலாலம்பூரிலுள்ள வைத்திய ஆராய்ச்சி நிலையத்திற் கடமையாற்றுகின்றார்:

சென்ற ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பிரதிநிதித் தேர்தல் காலத்தும் அதற்கு முன்னரும் பின்னரும் தங்கள் அரசியற் கொள்கையைப் பற்றி ஈழகேசரிப் பத்திரிகையிற் கவனமாக வாசித்துவந்திருக்கிறேன்.

தமிழ்க் காங்கிரசின் பிரிவினைக் கொள்கையைக் கண்டித்துப் பலமுறையும் எழுதி இருக்கிறீர்கள். ஒரு குடும்பம், ஒரு நாடு, முன்னேற்றம் அடைவதற்கு ஒற்றுமையே பிரதானமானதாகும். ஈழகேசரியின் மேலானகொள்கைக்குத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் அவரது சகாக்களும் செவிசாய்க்கவில்லை.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று குதூகலத்துடன் தேர்தல் காலத்தில் ஓடி ஆடிப் பாடியவர்கள் "தமிழன் என்று சொல்லடா தலை குனிந்து நில்லடா" என்ற நிலைமையை அடைந்தபின் தான் உண்மையை உணரலாயினர்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் அவரது சகாக்களும் பதவி ஏற்றுக்கொண்டதற்காக அவர்களைக் காய்வதாலும் அவர்கள் மேற் பாய்வதாலும் பிரயோசனம் இல்லை. தேர்தல் காலத்தும் முன்னரும் பின்னரும் உண்மையுடன் தொண்டு புரிந்தவர்கள் பிரிவினைகளை உண்டுபடுத்தாமல் ஆக்கவேலையில் ஈடுபடுதலே நலமாகும். இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அதற்கு வேண்டிய வழிவகைகளில் ஒற்றுமையுடன் தொண்டுபுரிவதே மேலான கடமையாகும்.

வடமாகாணம், கிழ்மாகாணம் எனும் இரு மாகாணங்களிற்றான் தமிழர் பெரும்பாலும் வசிக்கிறார்கள். வடமாகாணத்திலும் யாழ்ப்பாணத்திற்றான் கல்வி அறிஞர்களும் கல்லூரிகளும் அதிகமாக உள்ளன. இலங்கைத் தமிழர் உரிமைகளையும் வேண்டியவைகளையும் பாதுகாக்கவும் அவைகளைப் பெறக் கூடிய வழிவகைகளை எடுத்துக்காட்டியும் வழிகாட்டியும் ஈழகேசரியே அப் பணிகளைச் செய்யக் கூடிய தகுதியுடையதாகும். ஈழகேசரியே அத் தொண்டைச் செய்கின்றதென்பது எனது அபிப்பிராயம். அபிப்பிராயபேதமுண்டாயின் ஆசிரியர் அவர்களும் தமிழ் மக்களும் என்னை மன்னித்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

யாழ்ப்பாணத்தவர்கள் பிரதானமாக உத்தியோகங்களைப் பெற்றுச் சீவனத்துக்கு வழி தேடுவதுடன் நின்றுவிடக் கூடாது. ஆயிரக்கணக்காக இலங்கைப் பாதுகாப்புப் பகுதிகளான பொலிஸ், கடற்படை, தரைப்படை, விமானப்படை என்பனவற்றிற் சேரவேண்டும். அப்போதுதான் தமிழர்களும் உயர்வாகக் கருதப்படுவார்கள். அரசியலிலும் பொறுப்பு ஏற்பட இடமுண்டு.

கமத்தொழில், கைத்தொழில் விருத்தியடைய வேண்டும். அதற்கான சகல வசதிகளையும் உதவிகளையும் அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டும். ஒவ்வொருவரும் சகல தொழிலும் ஓரளவுக்குக் கற்றுக்கொள்ளக்கூடிய கல்வித் திட்டத்தைக் கல்வி மந்திரி நாட்டில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
### 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
ஏச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[3543]



சிறந்த பலனுக்கு

## C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

## C. C. C.

## கொழும்பு
## கொம்மேர்ஷல்
## கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
**Colombo Commercial Company**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3545)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னருக்கும் ஒரு பெண்?

பண்டிதர்
க. சந்திரசேகரம்

தன் ஆட்சிக்குட்பட்ட நாடுகளை யடுத்த பல காடுகளிலும் வேட்டையாடித் திரிந்த அரசன், தன் தோழருடன் திருவெங்கைக் காட்டிலும் வேட்டையாடச் சென்றான். அங்கே அதிகநேரம் வேட்டையாடித் திளைத்து, இளைப்பு மேலீட்டால், ஒரு சிற்றாற்றின், கரையிலே வெண்ணிலாப்போல பரந்த மணலில் இருந்தான். முத்துப் போன்ற தெளிந்த நீர் 'சல சல என்னும் ஒலியுடனே ஓடிச் செல்லுங் காட்சியில் அவனது மனம் லயித்துவிட்டது. அதனாலே, தோழர்களுடன் உரை யாடலையும் மறந்தான்.

காட்டிலுள்ள வேடர் தலைவனின் மகள், வழக்கம்போல அந்த மாலை நேரத்தில் தண்ணீர் அள்ளுவதற்காக அன்னமும் நாண மின்னிடை துவள அங்கே நடந்து சென்றாள். தண்ணீர் அள்ளியதும், தாமதியாது விண்ணிற் சென்று மறையும் மின்னற் கொடி போல அக்காட்டு வழியே சென்று மறைந்து விட்டாள். அரசனது கண்களும் அவள் மறையும் வரையும் அவளது அழகையே பருகிக்கொண்டிருந்தன. கண்களை அவளால் மீட்பதும் அரிதாயிற்று. அவள் அவ்வளவு சிறந்த அழகி. அவளது அழகுக்கு அரசன் அடிமைப்பட்டு விட்டான். சூரியனும் மலைவாயில் மறைந்து கொள்ளுமுன், அரசனும் தோழர்களுடன் குதிரையில் ஏறி அரண்மனையை அடைந்தனன்.

'காட்டிலே தனது உள்ளத்தைக் கவர்ந்த காரிகை யாராயிருக்கலாம்?' என்பதையறிய அவனது மனம் ஆவல்கொண்டது அதனால் அவனுக்கு உணவிலும் விருப்பஞ் செல்லவில்லை. 'அப்பெண் வேடர் தலைவனின் மகள்' என்பதைத் தோழன் சொலலக்கேட்டு ஆச்சரியமுற்றான்.

'வேடர்குல மென்றால் என்ன? அரசர் குலமென்றால் என்ன? எல்லாரும் ஓர் குலந்தானே' என்னும் பரந்த நோக்கம் அவனுக்குப் புதிதாய் உதித்தது. அதனால் குலத்தை மறந்து அழகை அவன் மனம் நாடிற்று. 'அரசர் குலத்தில் இத்தகைய அழகிய மங்கை இருந்ததுமில்லை; இருக்கின்றதுமில்லை; இருக்கப் போவதுமில்லை. அரசர் குலத்திற் பெண்ணில்லாவிட்டால் அரசர் பிற குலத்திற் பெண் கொள்ளலாம் என்ற வழக்கமும் உண்டல்லவா? அவ்வழக்கமும் எனக்கு மிக வாய்ப்புடைத்தாக இருக்கின்றது. குல நலம் விரும்புவார் அரச குலத்திற் பெண் வைத்திருந்தாலல்லவோ என்னை வெறுப்பர். ஆகவே, எனக்குக் குலப் பகையும் ஏற்படாது' என்றெல்லாம் சிந்தித்தான். 'வேடர் தலைவன் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிப்பானோ? அல்லது மறுப்பானோ? மறுத்தால் எனக்குத் தீரா அவமானம் ஏற்படுமே!' என்ற எண்ணங்களும் இவற்றிடையே தோன்றி மறையாமலில்லை.

'இனி அவள்தான் எனக்குரியவள். நாளை அவள் தந்தைக்கு ஓலை போக்கிச் சம்மதம் பெறுவேன்; குடத்து விளக்குப்போற் காட்டில் வாழ் பெண்ணை மணந்து அரண்மனையில் வாழச் செய்து, மலை விளக்காக்குவேன்' என மனக் கோட்டை கட்டிப் பள்ளியறையில் துயிலச் சென்றான். நடுயாமமும் ஆகியது. ஆனால், அவனுக்கு உறக்கம் வரவில்லை. பின்னர் ஒருவாறு உறங்கினான்.

சேவல்கள் சிறகை அடித்துக் கூவின. சூரியனும் உதயமானான். துயிலெழுந்த அரசன், 'நான் உனது மகளை மணக்க விரும்புகிறேன். அதற்கு உனது சம்மதத்தைத் தெரிவிப்பாயாக' என்னும் பொருள்பற்றிய ஒரு ஓலையை எழுதித் தூதனிடங் கொடுத்து வேடர் தலைவனுக்கு அனுப்பினான். தன் குதிரையில் ஏறி விரைந்து சென்று வேடர் தலைவனின் குடிசையை அடைந்தான். குதிரையின் குளம்புகள் நிலத்தைத் தாக்குவதால் எழுந்த சத்தத்தைக் கேட்டுப் பல வேடர் அங்கே கூடினர்.

அரண்மனையிலிருந்து தங்கள் தலைவனுக்கு ஒரு செய்தி வந்திருக்கின்றதென்பது அவர்களுக்குத தெரிந்துவிட்டது. தூதன் ஓலையை வேடர் தலைவனுக்கு நீட்டினான். அவனும் மிக்க பணிவுடன் அதை வாங்கி வாசித்துப் பார்க்கலானான். அவனது முகத்திற் கோபக்குறிகள் தோன்றின. கண்கள் சிவந்தன. கன்னங்களில் இரத்த மயமாய்ச் சிவப்பேறிற்று. புருவங்கள் பாணந் தொடுக்க வளைக்கும் வில்லைப்போல் மேல் நோக்கி வளைந்தன. அதரங்கள் துடி துடித்தன. 'அரசனுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிக்கக் கரும்புதின்னக் கைக்கூலியும் வேண்டுமா? என்று ஆனந்தத்துடன் வேடர் தலைவன் பதில் சொல்லுவான்' என்று எண்ணி வந்த தூதன் ஏமாற்றமடைந்து திகைத்தான்.

'பேய் பிடித்த தூதா! தன் மனைவியை விற்றவன் யார்? தன மனைவியைப் பாதிவஸ்திரத்துடன் கொடிய காட்டில் அலைந்து அழுது திரிய விட்டவன் யார்? தன் மனைவியை ஒருவனது கொடிய சிறையில் வருந்த விட்டவன் யார்? தம் மனைவியின் துகிலை உரிந்து அரசசபையில் மானபங்கஞ் செய்ய நெட்டை மரங்களென நின்று விழித்தவர்கள் யார்? இப்படியாய்த் தம் மனைவிமாரைப் பேணமுடியாத அரசர்கள் எத்தனை! இனி அரசரும் பெண்கொள்ள முடியுமோ?' என்று வேடர் தலைவன் வெடிபடச் சிரித்து, 'எச்சிலை உமிழடா; மணம் என்று ஓலை கொண்டு வந்த இத்தூதன் வாயைக் கிழியடா; இந்த மணவோலையைக் காற்றில் தூசாய்ப் பறக்க விடடா?' என்று அயலில் நின்ற வேடனிடங் கூறினான். ஆனால், தலைவன் சொற்படி வேடன் தூதனுக்கு எச்சில் உமிழவுமில்லை; அவனது வாயைக் கிழிக்கவுமில்லை; ஓலை மாத்திரங் காற்றில் உருண்டது.

இவ்வாறு அரசனை இழிவு படுத்திய வேடர் தலைவன், பின்னும் தூதனை நோக்கி, 'நாம் சாதாரண வேடரல்லர்; முத்தியைக் கொடுத்தருளும் சிறந்த வெங்கை நகரத்து வேடர். இறைவரும் எம் உறவை நாடி, எங்குலத்தவனாகிய கண்ணப்பனின் எச்சில் உணவை உண்டது உலகம் அறியும். அதனால் நாம் இரங்கி, அவர் பெற்ற வேலருக்கு எங்குலத்திற் பிறந்த பிள்ளையைக் கொடுக்காது, மான் வயிற்றிற் பிறந்து எங் குலத்தில் வளர்ந்த வள்ளியைத் திருமணஞ் செய்து கொடுத்ததையும் உலகம் அறியும். பேதாய்! இறைவனின் மகனுக்கும் பெற்ற பிள்ளையைக் கொடுக்காது, வளர்த்த பிள்ளையைக் கொடுத்ததனாலும் எங்குலப் பெருமையை நின் அரசனும் நீயும் அறிந்திலீர் போலும்'' என்று கூறினான். தூதன் வெட்கமும் துக்கமும் அடைந்து சென்றான்.

தூதன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அரசனுக்கு, அவனது முகவாட்டத்தின் காரணம் விளங்கிற்று. தூதன் வேடர் தலைவன் சொல்லியவற்றை அப்படியே கூறினான். அரசன் கட்டிய மனக்கோட்டை வேடர் தலைவனின் வெடிகுண்டினால் தகர்ந்தது.

மேல்வருங் கவியே இக் கட்டுரையாக எழுதப்பட்டது.

விற்ற தார்கலை பாதி யோடுவ
னத்தி லேயழ விட்டதார்
வெஞ்சி றைப்புக விட்ட தார்துகில்
உரிய விட்டுவி ழித்ததார்
உற்ற தாரமும் வேண்டும் என்றினி
மன்னர்பெண்கொளல் ஒண்ணுமோ
உமிய டாமணம் என்ற வாய்கிழித்
தோலை காற்றில் உருட்டடா
வெற்றி யாகிய முத்தி தந்தருள
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமைய டுத்தினி
தெங்கள் மிச்சில்மி சைந்தபின்
பெற்ற வேலர்த மக்கு யாமொரு
பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்ப ரோவிதென்
பேய்பி டித்திடு தூதரே.

[ விற்றது அரிச்சந்திரன். வனத்தில் அழவிட்டது நளன். சிறைபுகவிட்டது இராமன். துகில் உரியவிட்டு விழித்தது பஞ்சபாண்டவர். கலை—சீலை. தாரம்—மனைவி. விமலர்—சிவபெருமான். மிச்சில்—எச்சிலுணவு. மிசைதல் – உண்ணல். ]

இது சொல் நயமும், பொருள் நயமும், ஓசை நயமும் பெற்ற சிறந்த கற்பனை பொதிந்த கவியாகும். இக்கவி துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்ட திருவெங்கைக் கலம்பகத்தின் இறுதியில், நூலுடன் சேர்க்காது தனியன்களாய்க் காணப்படும் இருகவிகளில் முதலாவதாக உள்ளது. இதுவும் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்டதென்பதற்கு ஐயமில்லை. 'சுவைமிக்க கற்பனை பொதிந்த கவிகளை இயற்றுவதில் சிவப்பிரகாச சுவாமிகள் தனிப்பட்ட பெருமை வாய்ந்தவர்' என்பது அவரது பல நூல்களையுங் கற்றோர்க்கு நன்கு விளங்கும்.

## நாவலர் நினைவு

★

— நவாலியூர் சோ. நடராஜன் —

ராகம், மோகனம் ஆதி தாளம்

**பல்லவி**

செந்தமிழ் விளங்கச்செய்தானே—சிவசமயம்
தேசமெல்லாம் ஓங்கச் செய்தானே

**அனுபல்லவி**

அந்தகார இருளில் சிந்தை மயங்கிப் பர
தந்திர ராயிருந்த எந்தையர் நாடதனில் ... செந்

**சரணங்கள்**

நாவல ரென்றுலகக் காவலரும் போற்றி செய்யும்
பாவலனே ஈழநல்லூர்ச் சேவலங் கொடியுடைய
தேவர் சிறை மீட்ட தந்தை தேசிகன் திருப்பதங்கள்
ஆவலுடன்பாமலரால் தூவல்செய்துபோற்றிநிதம்..செந்

அஞ்சாத நெஞ்சமுடையான் அருங்கலைகள்
எஞ்சா தெடுத்துரைத்தே எஞ்சாதி யுய்யவைத்தான்
துஞ்சா தரும்பணிநாள் தோறுந் தொடர்ந்து செய்தான்
மின்சாரம் போலொளியும் மிகுந்த பலமுந் தந்தே.,.செந்

# தமிழாசிரியர்களின் தந்தை

பண்டிதர்
செ. நடராசா

'செத்தவன் கண் செந்தாமரைக்கண்' என்று கூறுவது உலக இயல்பு. ஆனால் திரு. சண்முகரத்தினமவர்களைப்பற்றி இங்கு கூறப்படுவன அவ்வகையைச் சேர்ந்த கூற்றுக்களல்ல. இன்னுங் கூற வேண்டியவற்றை கூறாது விட்டமைபற்றிய குறையேற்படக் கூடுமேதவிர, மிகைபடக் கூறிய குற்றமேற்படாது.

நமது அரசினர் பல ஆசிரிய கலாசாலைகளை நடத்துகின்றனர்தான். ஆனால் இலங்கையிற் கோப்பாய் அரசினர் கலாசாலைக்கு (இப்போது பலாலியிலுள்ளது) ஒரு தனி மதிப்பு. அந்தத் தனிமதிப்பைத் தந்தவர் திரு. சண்முகரத்தினமவர்களே என்றால் அது மிகையாகுமா? அவரது புகழ் ஆசிரிய உலகம் முழுவதும் பரவியுள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமை (19-11-48) திரு. சண்முகரத்தினமவர்களது தேகவியோகச் செய்தி ஆசிரிய உலகில் ஓர் பரபரப்பை உண்டாக்கியது. அவர் அதிபராயிருக்க அவரிடம் பயின்ற ஆசிரியர்களிடையே இச் செய்தி கூடுதலான அதிர்ச்சியையுண்டுபண்ணிவிட்டது. அதிபரிடம் பயின்ற, அல்லது அவருடன் தொடர்பூண்ட எவரும் அவரது உயர்ந்த குணங்களை எண்ணுமலிருக்க முடியாது. அவரது நேர்மை, ஆராய்ச்சித்திறன், காரிய வன்மை, நுண்ணறிவு, இரக்கம் [illegible] ஆகிய [illegible] மெச்சினர்.

தமிழாசிரியர்களுக்கு உலகில் நன் மதிப்பை உண்டாக்கித் தந்த பெரியார்களில் எமது அதிபர் சிறந்தவராவர். தமிழாசிரியர்களிடத்து நல்ல பழக்கங்களில்லை, சீரிய பண்பாடில்லை, போதிய திறமையில்லை என்று கூறியவர்கள் நாணும்படி தமிழாசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பேதமில்லை என்ற நிலையைத் தந்தவர் திரு. சண்முகரத்தின மவர்களேயாவர். ஆசிரிய மாணவராக இருந்து அவரிடம் பயின்ற ஆசிரியர்களிடத்துச் சிறந்த பண்பாடு, கடமையுணர்ச்சி, ஊக்கம், நேர்மை, திறமையாதிய சிறப்பியல்புகளை வெளிப்படையாகக் காணலாம். அவரிடம் பயின்று இப்பொழுது பெருநிலையடைந்துள்ள ஆசிரியர்கள் பலரை நாம் காண்கிறோம்.

மாணவரிடத்து நாம் எப்படிப் பழகவேண்டுமென்பதை உபதேச மாத்திரையானன்றி நடைமுறையாலுங் காட்டிய பெரியார் நமது அதிபரே. அவரது சிறப்பியல்புகளனைத்தையும் எடுத்துக்கூற இயலாவிட்டாலும் எம் மனதில் அவர் பிரிவாலேற்பட்ட வேதனையைத் தணித்தற்காகச் சில குணங்களை எடுத்துக்கூறலமையும்.

**நேர்மை**

திரு. சண்முகரத்தினமவர்களிடம் உள்ள உயர்ந்த குணம் நேர்மையாகும். அவர் காலமான செய்தியை எமக்கு அறிவித்த ஆசிரிய நண்பரொருவர் "நேர்மையான பெருந்தகையை ஆசிரிய உலகு இன்று இழந்து வாடுகிறது'' என்று வர்ணித்தெழுதினர். இஃதொன்றே அவரது நேர்மையை விளக்கத்தக்க சான்றாகும். அரசினரிடம் கடமையாற்றும் எந்த உத்தியோகஸ்தரும் எப்படியோ கடமையைச் செய்து திருப்தியடைவர். ஆனால் நமது அதிபரோ கடமையை நேர்மையாகச் செய்தாற்றான் திருப்தியடைவர். மேலதிகாரிகளின் பயமில்லாதபோதும் அவர் தங் கடமையைச் செய்ய எப்பொழுதாவது தவறியதே கிடையாது. அதைப் பார்த்தவர்களுங் கிடையாது. நேர்மையற்றவர்கள் மட்டில் அவர் நாகம்போலச் சீறி விழுவார். அதனாலநேகர் அவரைக் குறை கூறுவதுண்டு. ஆயினும் அவர் சமூகத்தில் அவர்கள் அஞ்சி ஒதுங்குவதை நாம் பார்க்கலாம். மகனாயினும், மனைவியாயினும், நண்பனாயினும் குற்றங்கண்டாற் கடிந்தே தீருவார். அதிபர் பேசும்பொழுது நன்றாக யோசித்து ஆறுதலாகவே பேசுவார். அவதிப்பட்டு ஏதாவது வாக்குப் பிழை நேர்ந்து நேர்மை தவறிவிடுமோ என்று அஞ்சிப்போலும் அவர் அவ்வாறு பேசுவது.

அரிசிக் கட்டுப்பாடு அரைப் படியாக இருந்தபோது கலாசாலை மாணவர்களால் நடத்தப்பட்ட உணவு நிர்வாகசபை "கலாசாலைக்கு வெளியிலிரு

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வரையறை

## இலக்கிய அரங்கம்

பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இலக்கியமென்றால் என்ன என்பதை இலக்கியம் என்னும் தலையங்கத்தின் கீழ் குறிப்பிட்டார்கள். அதில் திரு. வேந்தனார் அவர்கள் ஆசங்கைகளையும், விலங்காவிடங்களையும், தாம் அதுபற்றி அறிய விரும்பும் ஆவலையும் வெளிப்படுத்தியதன்றிக் கட்டுரையின் பெரும் பகுதியை மறைமுக ஒப்புக்கொண்டுமிருக்கிறார். ஆயின் அவர் போக்கு 'விளவின் மேவு நற்கனிகொள்ளவேண்டி நயந்து கல்லெறிவார்' போக்காயிருத்தல் வருந்தத்தக்கது.

பண்டிதர் அவர்கள் கூற்றில் புதினம் ஒன்றுமில்லை என்று வித்துவான் அவர்கள் கூறுகிறார். இக்கூற்று பண்டிதர் கூற்றை ஒப்புக்கொள்ளுமாறு அவர் மனம் தூண்டவும் வாக்கு மாறுவதைக் காட்டுகிறது. ஏனெனில், புதியது அல்லாவிடில் அது பழையது என்றாகும். அங்ஙனமாயின் அது ஒப்புக்கொள்ளற்பாலது என்பது வேந்தனார் கருத்தாக வேண்டும். அங்ஙனமாக வேந்தனார் அதைத் தொடர்ந்து 'மரபுநிலை திரிந்த மாற்றமே காணப்படுகிறது' என்று கூறும்பகுதி இது புதியது என்பது அவர் உள்ளக்கிடக்கை என்பதைக் காட்டுகிறது. எனவே இப் புதிய விஷயம் ஒப்புக்கொள்ளற்பாலது என்பதை வேந்தனார் மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பது பெறப்பட்டது.

வித்துவான் வேந்தனார் அவர்கள் 31-10-48 இதழில் எழுதிய ஒரு வாக்கியம் இது: "அன்பின் ஐந்திணை இலக்கியங்களின் இலக்கணத்தைத் தொல்காப்பியனார் விளக்கிய முறையைப் புதுக்கித் தாமோர் புது இலக்கிய அமைப்பை ஆராய்ந்து காட்டுவதுபோல எழுதுகின்றார்" என்பது. இவ்வசனம் சிறிது மாற்றம் பெற்றால் பண்டிதர் கருத்தை வித்துவான் விளங்கிக்கொள்வார். அங்ஙனம் மாற்றினால் அவ்வசனம் 'அன்பின் ஐந்திணை இலக்கியங்களின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் விளக்கிய முறையைப் பின்பற்றி இலக்கியங்கள் அனைத்திற்கும் ஓர் இலக்கிய அமைப்பினை ஆராய்ந்துகாட்டமுற்பட்டார்' என இருக்கும் இப்பொழுது பண்டிதர் கருத்தை வேந்தனார் அறியமுடியும் என எண்ணுகிறோம்.

பண்டிதர் அவர்களின் ஆராய்ச்சி புதிது; பழைமையின் அஸ்திவாரத்தில் எழுந்தது; இலக்கிய நூல்கள் அனைத்தையும் அடக்குதற்கேற்ற முறையில் ஆக்கப்பட்டது. எனவே பண்டிதர் ஆரம்பித்து வைத்த இவ்விஷயத்தில் மற்றையோர் இயலுமாயின் உதவி செய்யலாம். அவர் சென்ற பாதையை நன்கு விளங்கிக் கொண்டு அவர் கையாண்ட சொல் ஆற்றல் அற்றதெனின் 'ஆற்றல் அற்றது' என்றுமாத்திரம் கூறிவிடாது ஆற்றலுடைய சொல்லைக் காண்பதில் உதவி செய்வதுதான் அறிஞர் கடன். 'சந்தர்ப்பம்' என்னும் சொல் ஆற்றல் அற்றதெனின் தகுந்த சொல்லைக் காண்பதில் வேந்தனார் முனையலாமே!

சந்தர்ப்பம் இடம் காலம் என்பவற்றைக் குறிக்கும் என வேந்தனார் 'இணையே கைகோள்' என்னும் சூத்திர மேற்கோள்மூலம் கூறினார். எனவே அச்சொல் (சந்தர்ப்பம்) 'முதல்' (நிலம்–இடம்–பொழுது–காலம்) எனத் தொல்காப்பியனார் கூறியதை விளக்க ஒருவாற்றான் உபயோகிக்கத்தக்கது. வேறு தகுந்த சொல் கிடைப்பின் பண்டிதர் மறுக்கமாட்டார் என்பது முதல், கரு, உரியை ஆதாரமாகக்கொண்டு கூறியமையால் அறியப்படும்.

பாத்திரம் (கரு) என்பது பற்றி வேந்தனார் சுற்றி வளைந்து பல பல கூறுகிறார். பாத்திரம், கருவென்பதைக் கருதுமாயின் தலைமக்களும் கருப்பொருள்கள்தாமா? என்னும் பொருள்தர 'கருப்பொருளைப் பாத்திரமெனக் கற்பித்தால் உரிப்பொருளாகிய ஒழுக்கத்

— வ. நடராசா —

தை மேற்கொண்ட அன்பினைந்திணைத் தலைமக்கள் எங்கு மறைந்துவிட்டார்கள்' எனச் சுற்றி வளைந்து வினவுகிறார். அதற்கு விடை அவர்கள் களவுகாலத்து மறைய விரும்பின் மறையலாம். அங்ஙனம் மறைய விரும்பின் கூருவுள் மறையலாம் என்பதுதான்.

'தெய்வம் உணாவே' என்னும் கருப்பொருள் இவையெனக் கூறும் சூத்திர உரையில் 'அவ்வகை பிறவும்' என்பதனால் தலைமக்கள் பெயரும் என நச்சினார்க்கினியரும், 'தலைமகன் பெயர், தலைமகள் பெயர்' எனக் களவியலுரைகாரரும் கூறுவதனால் அது பெறப்படும். இதுபற்றிய அவரது மற்றைய கூற்றுகள் யாவும் இப்பொழுது பயனில் கூற்றுமென்பதை அவரே உணர்ந்திருப்பார். இவற்றையே மரபுநிலை திரிந்தன என அவர் கருதினாரோ!

இனி, உரிப்பொருளைப் பண்டிதர் அனைத்து இலக்கியங்களுக்கும் பொருந்துமாறு உணர்ச்சி என்னும் சொல் மூலம் கூறினார். அன்பினைந்திணை இலக்கிய வரையறை கூறிய தொல்காப்பியர் உரியை உணர்ச்சியெனக் கூறாமையான் அவர் கருத்துக்கு மாறு என்று எங்ஙனம்கொள்ளலாம்.

ஒழுக்கம், அறம், இன்பம் என இலக்கியங்களிற் பயிலப்படும் உணர்ச்சிகளை அடக்குதற்கு இச்சொல் பொருத்தமானது எனப் பண்டிதர் எண்ணியிருக்கலாம். பொருத்தமற்றதெனின் இதிலும் வேந்தனார் முயற்சி செய்யலாமே!

இனி, அன்பினைந்திணை இலக்கியங்களுள் தலைமக்கள் பெயர் கொள்ளப்படாததேன் என்பது வினா. உயர்ந்த உரி (உணர்ச்சி)ப் பொருளை அசுத்த பாத்திரத்துள் வைத்துக் கூறாது அவ்வுரியை பெயர் குறிப்பிடாது கூறல் என்பது பண்டிதர் கூறும் விளக்கம். எங்கேயாவது ஓரிடத்து ஒரு சார் மக்களிடை நடக்கும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி உரைதல் காரணம் என்பது வேந்தனார் கூறும் விளக்கம். அவ்விளக்கத்திற்கு ஆதாரமாக வேந்தனார் 'இஃது இல்லது எனப்படாது உலகியலேயாம்; உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்று என்றவழி அது சூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினரென்று உலகம் இழித்திடப்படுதலின் அதுவும் இழித்திடப்படும். இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினர். எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல்போலாதுஉள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம்போல யாதானும் ஓரேவழி ஒருசாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்து செய்யுட்செய்தல்ஒப்புமை நோக்கி. மற்று இல்லோன் தலைவனாக இல்லது புணர்க்கும் நாடக வழக்குப்போலக் கொள்ளற்க' (தொல். பொரு. அகத். ரு) என்னும் நச்சினார்க்கினியர் கூற்றைக் காட்டினார்.

இனி, இதுபற்றி 'அன்பினைந்திணைக் களவெனப்படுவது' என்னும் களவியல் முதற் சூத்திர உரையுள் களவியலுரைகாரர் 'அவ்வெட்டும் உலகினுள்ளன; இஃது அன்னதன்று இல்லது இனியது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாதலின் இதனை உலக வழக்கினோடு இயையா தென்பது' எனக் கூறியுள்ளார். அஃதாவது ஆசுர முதலிய எண்வகை மணங்களைப் போன்றதன்று அன்பினைந்திணைக்களவு. எண்வகை மணங்களும் உலகியல்; களவு உலகியலன்று. அஃது புலவரால் இல்லது, இனியது என நாட்டப்பட்டது என்றவாறு. இது பண்டிதர் அபிப்பிராயத்துக்கு ஆதாரமாகத் தக்கது. இதில் இருவர் கூற்றுக்கும் ஆதாரமுண்டேனும் நக்கீரர் பெருமைபற்றியும், அந் நாலைக்கேட்ட உருத்திரசன்மர் பெருமைபற்றியும் நக்கீரநரையேகொள்ளத்தக்கது. அன்றியும், திருக்கோவையுரையுள், "பொருளதிகாரத்துக் கூறப்பட்ட தலைவனும், தலைவியும்" என்று கூறப்படுதலினாலும், "எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்துள் "மொழிகள் மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப் பொருள் குறிப்பனவும் என இருவகைப்படும். அவற்றுள் பொய்ப்பொருள் குறிப்பனவும் (ஆகாயப்பூ, முயற்கோடு) பொருள்உணர்த்துவனவேயாம். அல்லாக்கால் இல்லோன் தலைவனாகவரும் தொடர்நிலைச் செய்யுள் புலவராற் கொள்ளப்படா என்பது!' என சேனாவரையர் கூறுதலினாலும் அகப்பொருள் இலக்கியங்கள் இல்லது இனியது எனப் புலவரால் நாட்டப்பட்டன என்னும் களவியலுரைகாரர் கொள்கை வலுவுடையதாக அதுபற்றிப் பண்டிதர் கூற்றும் வலிவுடைத்து என்பது பெறப்பட்டது. இத்தகையவற்றையே வேந்தனார் மரபுநிலை தவறியன எனக் குறிப்பிட்டார் போலும்; அன்றியும், "மற்று இல்லோன் தலைவனாக இல்லது புணர்க்கும் நாடக வழக்கு" என நச்சர் கூறுகிறார். அஃது மயக்கமிலதாயின் (வழுவற்றதாயின்) அதனை ஒக்கும் அகப்பொருள் நூல்கள் மாத்திரம் மயக்கமுடைத்தெனல்எங்ஙனம்பொருந்தும்

இதுகாறும் கூறியவற்றால் பண்டிதர் அவர்கள் ஆராய்ச்சி இன்னும் எவராலும் மறுக்கப்படவில்லை என்பது பெற்றாம். இவைவிரிவஞ்சிச் சுருக்கமாக விளக்கப்பட்டன. விரித்துக்கூறல் வாதவிஷயத்தினின்று அப்புறம் கொண்டு போய்விடு மாதலின் எதனையும் சுருக்கமாக நியாயங்களையும் காரணங்களையும் கூறி ஆராய்தல் நற்பயன்தரும்.

# அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை

## சமய பாடத் தேர்தல்

மேற்படி சபையின் ஆதரவில், 1949-ம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் சமயபாடப் பரீட்சை நடைபெறும். தேவாரம், உபநியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும், தேர்தலுக்குரிய பாடங்களாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள, ஒவ்வொரு வட்டாரத்திலுமிருந்து, இருபத்தைந்து பிள்ளைகளுக்குக் குறையாமல், தேர்தல் தினத்தன்று பங்குபற்றினால், மேற்படி தேர்தல், அவ்வவ் வட்டாரங்களில் வசதியான ஒவ்வோரிடத்தில் சபையாரால் நியமிக்கப்பெற்ற மத்தியஸ்தர்களால் நடத்தப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்படும். அங்ஙனமன்றி, ஒவ்வொரு வட்டாரங்களிலும் இருபத்தைந்து பேருக்குக் குறைந்தால் மத்தியஸ்தர்களின் பிரயாணச் செலவு கட்ட வேண்டும்.

வட்டாரத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான பிள்ளைகளுக்குத் தகுதிப்பத்திரங்களும், மேற்படி வட்டாரத் தேர்தலில் மத்தியஸ்தர்களால் அனுமதிக்கப்பட்டு, வண்ணார் பண்ணையில் நடைபெறும் மத்தியத் தேர்தலுக்குத் தோற்றித் திறமை காட்டிய முதல் மூன்று ஆண்பிள்ளைகளுக்கும், அவ்வாறே பெண்பிள்ளைகளுக்குமாக, மூன்று பிரிவுகளிலும் மொத்தம் பதினெட்டுப் பரிசில்களும், 1949-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடைபெறும் சைவமகா நாட்டில் வழங்கப்படும்.

மனுப்பத்திரங்கள், 1949-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ஆம் திகதிக்கு முன், சபைக்காரியதரிசிக்கு, தலைமையாசிரியர் கைச்சாத்துடன் பிறந்த திகதி குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். மனுப்பத்திரகாரர்களின் வயது 31-1-49 வரை கணிக்கப்படும்.

### பாட அட்டவணை

#### 1. தேவாரம்

1. பாலர் பிரிவு: [பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள்]

I. தேவாரம்: திருநீற்றுப் பதிகம்.
இராகம்: நவரோஸ். தாளம்: ரூபகம்.

II. திருவாசகம்: "நினைத்தனை யுள்ளதோர்" (திருக்கோத் தும்பி)
இராகம்: மோகனம்.

III. புராணம்: "ஓங்கிய வாக்கில்" என்னும் முதலுடையது (பெரிய புராணம்)
இராகம்: தோடி.

2. மத்திய பிரிவு: [பதினறு வயது வரை]

1. தேவாரம்: நமச்சிவாயப் பதிகம் (காதலாகி என்பது தொடக்கம்)
இராகம்: பைரவி. தாளம் திரிபுடை.

2. திருவாசகம்: திருப்பள்ளி யெழுச்சி.
இராகம்: பூபாளம்.

3. புராணம்: "சென்ற காலத்தில்" என்னும் முதலுடையது (பெரிய புராணம்)

4. திருப்புகழ்: கைத்தல நிறைகனி.
இராகம்: நாட்டை. தாளம். ஆதி.

3. மேற்பிரிவு: (பதினறு வயதிற்கு மேல்)

1. தேவாரம். பஞ்சாக்கரப்பதிகம் (துஞ்சலும் துஞ்சல் என பது முதல்)
இராகம்: கேதார கௌளம். தாளம் ஆதி.

2. திருத்தாண்டகம்: பேணிய நற்பிறை தவமும்.
இராகம்: அரிகாம் போதி.

3. திருவாசகம்: திருவெம்பாவை.
இராகம்: பூபாளம்.

4. புராணம்: அண்ணலாரடிகள் என்னும் முதலுடையது. (பெரிய புராணம்)

5. திருப்புகழ்: சரணகமலாயத்தை.
இராகம்: செஞ்சுருட்டி. தாளம் சம்பை.

#### உபநியாசம்

1. பாலர் பிரிவு: (12 வயதுவரை)
1. விபூதி, 2. நித்தியகருமம், 3. ஆலய வழிபாடு, 4. சைவசமயம் 5. பரஞ்சோதிமுனிவர் 6. திருவிளை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


தொடர்பான

# சரித்திர பாடப் புத்தகங்கள்

2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்புக்குரியன

ஆக்கியோன்:

ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)

சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்க வேண்டியதற்கு நியாயங்களாவன:

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக்கமையும் படி இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2. இப்புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினாக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளன.
4. இப்புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப்பட்டன.
5. இப்புத்தகங்களிற் காணப்படும் சில பாடங்கள் ஆரம்ப வகுப்புக்களுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6. இப்புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது.

ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

[3542- Viii]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்து அரக்கர்

பழைய காலத்து இலங்கை மன்னர் பிரமாண்டமான வேலைகளை அரக்கர் குலத்தின் உதவியுடன் செய்து முடித்தனர். இன்று இவற்றை யார் செய்கின்றனர்? இதற்கு **ஜாக்ஸ்** இக்கட்டுரையிலே தகுந்த பதில் கூறுகின்ருர். இவ்வாராய்ச்சி **டைம்ஸ் ஒவ் சிலோன்** என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது—ப-ர்.

அத்தியாயம் 16

**ஸ்ரீ லங்காவில்வதியும் மக்களுக்குத் தங்கள் நாட்டில் ஒரு தனிப்பற்று. இது காரணமாக அதன் பெருமையை உலகறியும் வண்ணம் உரக்கக் கத்தி வருகின்றனர். இந்த நாற்ருண்டு மகத்தானதெனவும் அவர்கள் பறையடித்து வருகின்றனர். இத்தனைக்கும் அவர்களை எவருங் கண்டித்ததே கிடையாது.**

எங்களைப்பற்றி எங்களுக்குப் பெரிய எண்ணம். பழைமையைப் பற்றியும் இன்றைய காலத்தைப் பற்றியும் பேசிப் பெருமை கொள்ளுகின்ருேம். அதுபோல எதிர்காலம் சம்பந்தமாகவும் நாங்கள் தலைநிமிர்ந்து நின்று பேசுகின்ருேம்.

## எப்படிச் செய்தனர்?

வெளி நாட்டில் உள்ள ஒருவர் இலங்கைக்கு வருகின்ருர். எங்களைப்பற்றி நாங்கள்கொண்டுள்ள சொந்த அபிப்பிராயத்தை அவர் ஏற்பதற்குத் தயங்குகின்ருர். உடனே, நாங்கள் அவரைக் கிலமடைந்து கிடக்கும் புராதன நகரங்களுக்கு அவசர அவசரமாக அழைத்துச் செல்லுகின்ருேம். நாங்கள் அந்நகரங்களை அழிப்பதற்குமுன் அவை எவ்வாறு சுவின்பெற விளங்கினவென்பதை அவர்களுக்கு நாங்கள் எடுத்துரைக்கின்ருேம். இவற்றைக் கண்முன் கண்டு அவர்கள் நடுநடுங்குகின்றனர்.

அவர்கள் ஒருவாறு சுய உணர்வு பெற்றதும். ஒன்றன்பின் ஒன்ருகப் பல கேள்விகளைக் கேட்கின்றனர். அந்தக் காலத்தில் ஸ்ரீ லங்காவில் மின்சார சக்தி என்ற பேச்சே கிடையாது. அப்படியாளுல் இந்தப் பிரமாண்டமான கருங்கற்களை ஒன்றன் மீது ஒன்ருக எப்படி அடுக்கி வைத்தனர். அதுவும் அவ்வளவு உயரத்துக்கு அவற்றை எவ்வாறு கொண்டுபோய்ச் சேர்த்தனர்? குளங்கள் எனச் சொல்லப்படும் சின்னஞ் சிறு கடல்களை எப்படித்தான அமைத்தனர்?

## அரிய யோசனை

மனிதர்கள் செய்து முடிக்கவியலாத இப் பிரமாண்டமான வேலைகளை, அரக்கர்களே செய்து முடித்தனர் என்பதைச் சுயஅறிவுள்ள எவரும் மறுக்க முடியாது. இவற்றைக் கண்டுதான் வெளி நாட்டினர் திகைத்துப்போய் விடுகின்றனர். இனி, வேறும் முக்கியமான கேள்விகள் எழுகின்றன. சரி, இப்படியான பொலன்நிகழ் கட்டடங்களை அமைப்பதற்கு யார் படம் போட்டனர்? யார் வேலைகளை மேற்பார்வை செய்தனர்? என்பனவே அக்கேள்விகள்.

இப்போதுதான் நாங்கள் உயிர்நிலையத்தைத் தொட்டிருக்கின்ருேம். இதையே ஸ்ரீ லங்காவிலுள்ளவர்கள் மூடுமந்திரமாக வைத்திருக்கின்றனர். இன்று இது பகிரங்க இரகசியமாகிவிட்டது. அகில உலகமக்களும் இதை அறிந்து வருகின்றனர். வாசகர்களுக்குச் சொன்னுலென்ன, நாங்கள் திறமை வாய்ந்தவர்களைக் கொண்டு இவ்வேலைகளைச் செய்விக்கின்ருேம். பெரிய கோடேறி வழக்காடும் விஷயத்திலும் நாங்கள் எங்கள் பிரக்கிராசிமாரைச் சட்டநிபுணர்களுடன் கலந்தாலோசிக்கும்படி வற்புறுத்துகின்ருேம். அவரும் அப்படியே நடந்து கொள்ளுகின்ருர். இதற்காக நாங்கள் அவருக்கும் ஏனைய சட்ட நிபுணர்களுக்கும் ஒரு முறைபோற் பலமுறை தாராளமாகப் பணத்தை அள்ளிக் கொடுக்கின்ருேம். இந்த அரிய யோசனைகளை நீதிபதி ஏற்காதுவிடின், நாங்கள் உடனே உயர்தர நீதிமன்றத்துக்கு 'அப்பீல்' செய்கின்ருேம். இங்கு இன்னும் அதிகமான விவகார யுக்திகளை உதவுகின்ருேம். இந்த உயர்தர நீதிமன்றம் எங்கள் அபாரயோசனைகளை ஏற்றுக் கொள்ளுமிடத்து நாங்கள் மகத்தான வெற்றி பெறுகின்ருேம்.

## கரைகாணுதல்

இங்கிலேயில், எங்கள் எதிர்க்கட்சியினர் சும்மா இருந்து விடுவதில்லை. அவர்கள் சுத்த அசடுகளானமையால், நீதியரசரின் தீர்ப்பை ஏற்க மறுக்கின்றனர். ஆகவே, அவர்கள் சீமைக்கு அப்பீல் செய்கின்றனர். இது காரணமாக அதிக செலவும் அலைச்சலும் ஏற்படுவதுண்டு. எங்களுக்கும் மகாநிபுணர்களின் ஆலோசனைகள் அதிக செலவிற் கிடைப்பதால் நாங்களும் ஒரு கரைகாண முயற்சிக்கின்ருேம். ஈற்றில் எங்களுக்குச் சார்பாக நடந்தன யாவும் மாருக முடிந்து விடுகின்றன. இம்முடிவையும் அலட்சியம் செய்து நாங்கள் வேறு நீதிமன்றங்களுக்கு விண்ணப்பஞ் செய்யத் தயார். ஆனுல் அத்தகைய ஒரு மன்றம் உலகில் இருந்தாற்ருனே? ஏதோ இயன்றளவு பார்த்தோம் என்று உள்ளத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டு நிபுணர்களின் யோசனைகளுக்குக் கொடுத்த பணத்தைப் பற்றியும் பெருமையடித்துக் கொள்ளுகின்ருேம்.

## பாக்கியசாலிகள்

இனி, வைத்தியத்துக்கு வருவோம். கொழும்பிலே வாழப்பிறந்தவர்கள் அத்தனைபேரும் பாக்கியசாலிகள். பிற இடங்களில் வதியும் எங்கள் நண்பர்களுக்கு வருத்தம் பிடித்துவிட்டால் அவர்களுக்கு அங்குள்ள டாக்குத்தர்மார்தான் துணை. இவர்கள் நிபுணர்களாகவும் இருக்கலாம். ஆயிரம் பேரைக் கொன்றவர்களாகவும் இருக்கலாம். ஆனுல், கொழும்பில் உள்ளவர்களுக்கு நூற்றுக்கணக்கான டாக்குத்தர்மாரின் உதவி உண்டு. டாக்குத்தர்மாரின் திறமைக்குத் தக்க படி பணம் உதவும் சக்தி எமக்கு உளதாயின் அத்தனை பேரையும் வீட்டுக்கு வரவழைத்துப் பார்க்கலாம். இவர்கள் அனைவரும் சகல வியாதிகளையுங் குணப்படுத்தும் சக்தி படைத்தவர்கள். ஏனெனில் ஒருடாக்குத்தருக்குக் குறித்த ஒரு வியாதியில் நல்ல அனுபவம் இருந்தால், அவ்வரை உடனே வேறு வியாதிகளைக் குணப்படுத்துமாறு அரசாங்கம் பணித்து விடுகின்றது.

## திறமை

ஆகவே பல்வேறு வியாதிகளையுங்குணப்படுத்துவதால் இவர்கள் பெரிய புலிகளாகிக் கொள்ளுகின்றனர். [illegible] பட்டவர்களிடம் [illegible] மிருந்த நம்பிக்கை உண்டாகியே தீரவேண்டும். ஆனுல் இது எப்போதும் நடைபெறுகின்ற காரியமல்ல. இந்தியாவிலுள்ள டாக்குத்தர்மார் பெரிய நிபுணர்களாகவிருந்தாலும் அதிகமாகப் பணம் வசூலிப்பதில்லையென்பதைக் கேள்விப்பட்டவுடன் ஒரு சில நோயாளிகள் அவர்களிடஞ் சென்று சிகிச்சைபெறுவது இலாபமெனக் கருதுகின்றனர். காசுக்குவியலுக்கு மத்தியில் வாழ்பவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று சிகிச்சை பெற்றிருக்கின்றனர். சகல விஷயங்களிலும் பொதுவான அம்சமே எழுகின்றது: திறமானயோசனை; திறமான மூளை; திறமான சிகிச்சை.

சில சந்தர்ப்பங்களில் நிபுணர்களை இங்கு வரவழைக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிடுகின்றது. இது நவமானவோர் கொள்கையன்று. இப்போது சிலகாலமாகப் பலவிஷயங்களிலும் நிபுணர்களின் ஆலோசனைகளையே இறக்குமதி செய்து வருகின்ருேம். நிர்வாகந்தொட்டு நாய்களை வளர்ப்பதற்கு உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவது ஈருக நாங்கள் பென்னம் பெரிய நிபுணர்களையே அவ்வேலைகளுக்கு அமர்த்தி வருகின்ருேம். இவர்கள் பிரிட்டனில் இதற்காகப் பரம சங்கடப்பட்டுக் கஷ்டமான பரீட்சையிற் சித்தியடைகின்றனர்.

## பணமிருக்கின்றது

இன்று இந்த வேலை இலங்கை மக்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. எனவே, பெரிய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்காக நிபுணர்களை இறக்குமதி செய்ய எங்களுக்குச் சுதந்திரம் கிடைத்துள்ளது. கடவுளே யென்று இவ்வளவு செலவுகளுக்கும் போதியளவு பணமிருக்கின்றது. உதாரணமாக, நீர் விநியோகத் திட்டம்பற்றி ஆலோசிக்க வேண்டுமாயின் நாங்கள் ஒரு நிபுணரையல்ல, மூவரைத் தானும் வரவழைக்கலாம். ஒருவருடன் நாம் நிறுத்திக் கொள்ள முடியாமைக்குக் காரணம், ஒவ்வொருவரும் வெவ்வேறுன அபிப்பிராயங் கொண்டிருப்பதேயாகும். அத்துடன் அரசியல் நிபுணர்கள் இயந்திரக்கலை நிபுணர்களுடன் ஒருபோதும் ஒத்துவருவதேயில்லை. இப்படி விஷயங்கள் சிக்கலாகிக்கொண்டு போகும்

### நவீன ஆராய்ச்சி

போது நாங்கள் வேறும் புதிய நிபுணர்களின் உதவியை நாடுகின்ருேம். கடைசியாக ஒருவர் வந்து அகப்படுவார். இவர் பெருந்தொகையான அரசியல் நிபுணர்களின் அபிப்பிராயத்துக் கேற்ப நடந்து கொள்ளுகின்ருர்.

## மக்கள் ஆட்சி

ஜனநாயகத்தின் குளிர்மையான ஆசிர்வாதங்களை அனுபவியாத நாடுகளும் நிபுணர்களின் சேவைகளைப் பெறுகின்றன. இவ்விஷயத்தில் அவர்கள் மிகச் சிறந்த ஒருவரையே தேடிப்பிடித்து அப்பதவியில் அமர்த்தி விடுகின்றனர். மைசூரில் இதேமுறைதான் கையாளப்பட்டது. ஆகவே, மிகச் சொற்பகால எல்லைக்குள் நீர் வீழ்ச்சி மின்சாரம் அங்கு ஏற்படுத்தப்பட்டுப் பல வருடங்களாகப் பயன் கொடுத்தும் வருகின்றது. இலங்கை அடுத்தடுத்து நிபுணர்களின் உதவியை நாடியபடியால் நீர்வீழ்ச்சி மின்சாரத்தின் நன்மைகளை அது இன்னும் அனுபவித்தபாடில்லை. ஆனுல் அதற்குப் பதிலாக ஜனசக்தி என்று சொல்லப்படும் மக்களின் ஆட்சி நிலவுகின்றது. இது நீர்வீழ்ச்சியின சக்தியினும் பார்க்க மேலானது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# தமிழாசிரியர்களின் தந்தை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து மாணவரே அரிசி கொண்டுவந்து கொடுத்து நிறைய உண்ணலாம்" எனத் தீர்மானித்தது. அத் தீர்மானத்தை யான் அதிபரிடஞ் சொல்லி அரிசி கொண்டுவர உத்தரவு கேட்டேன். இதை எவராவது மறுப்பார்களா என்று யாவரும் எண்ணியிருந்தோம். ஆனுல் முடிவு வேருகியது. அதிபர் பின்வருமாறு கூறினுர்: "அரசினர் யாவருக்குஞ் சமமாக அரைப்படி கிடைக்க வேண்டுமென்று எண்ணிச் சட்டமாக்கியிருக்கிருர்கள். நாம் மேலதிகமாக அரிசி கொண்டுவந்து சேர்ப்பது மனச்சாட்சிக்கு விரோதம் என்று கூறி உத்தரவு தர மறுத்துவிட்டனர். இப்படி எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள. ஆயினும் இச் சம்பவம் ஒன்றே அதிபரது நேர்மையை விபரிக்கும்.

## ஆராய்ச்சியுள்ளம்

அதிபரது உள்ளம் ஆராயும் நிலையிற்ருன் அமைந்துவிட்டது போலும். எதை எடுத்தாலும் ஆராய்ச்சிதான். அவரை "முட்டையில் மயிர் காணும்" வர்க்கத்திற் சேர்த்துப் பேசுவோர் சிலர். கத்தரி எத்தனைநாளிற் காய்க்கும் என்ற ஓராராய்ச்சியை அவர் தொடங்கினுல், தோட்டக்காரர், மாணவர், ஆசிரியர், அயலவர், மனைவி, நண்பர், அங்கு வருபவர், தெருவாற் செல்பவர் ஆகிய அனைவரிடமும் விசாரணை செய்வார். பின்பு தனது அனுபவத்தையும் சீர்தூக்கிப்பார்த்துச் சரியானதை ஏற்றுக்கொள்வர். இப்படி விசாரணை [illegible] சில பிள்ளைகள் போலவே பேசுவார். ஒருநாள் மிக அவசியமான கருமார்த்தமாக அவரிடம் யான் சென்றபோது அதிபர் "வைத்தியர் என்ற சமஸ்கிருத பதம் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது; அது 'வித்' என்ற தாதுவிலிருந்து பிறந்தது. ஆங்கிலத்திலும் 'Doctor' என்ற பதம் ஆராய்ந்தவன் என்ற கருத்தைத் தருகிறது. தமிழில் இதுபோன்ற பதத்தை ஆராய வேண்டும்" என்று கூறிக்கொண்டு அகராதிகளைப் புரட்டத்தொடங்கிவிட்டார். எனது மனம் ஆராய்ச்சியிலீடுபட மறுத்தது. ஆயினும் என்ன செய்வதென்றிருந்துவிட்டேன். வகுப்பிற் கற்பிக்க வந்தாலும் இப்படியாகத்தானிருக்கும். ஏதாவது எக்கச்சக்கமான சொல் அவர் மனதிற் பட்டுவிட்டாற் போதும் அன்று பாடம் அதுதான். வகுப்பில் அநேகருக்கு நித்திரை—அவருக்கு ஆராய்ச்சி. ஆராய்வதில் ஒருபோதும் அவருடைய உள்ளம் களைப்படைவதில்லை. இவரது ஆராய்ச்சித் தன்மையை இவரால் மொழிபெயர்க்கப்பட்ட அகநூலில்தெளிவாகக் காணலாம்.

## நிர்வாக வன்மை

திரு. சண்முகரத்தினமவர்களுக்கு நிர்வாகத் திறமை பிறப்புரிமை. கருமங்கள் செய்வதற்கு மூன்று மாசங்களின் முன்பே அக் கருமத்திற்குத் திட்டம்போடத் தொடங்கிவிடுவார். கருமத்தை மிக இலகுவாகவும், குறைந்த நேரத்திலும், சிக்கனமாகவும் ஒழுங்காகவும் நடத்தவேண்டுமென்பது அவரது துணிவு. காரியஞ் செய்வதற்கு முன் அணிகோலுவதில் அவர் அதிக காலத்தைச் செலவிட்டாலும் காரியம் அவர் எண்ணியவாறே செய்துமுடித்துவிடுவதிற் கைதேர்ந்தவர். கருமத்தைச் செய்வதற்கேற்றவரைத் தேர்ந்தெடுப்பதிலும், அவரைக்கொண்டக் கருமத்தைச் செய்விப்பதிலும் நிகரற்ற ஆற்றலுடையவர். கருமஞ் செய்பவர்களைப் பொதுவாக நோக்காது வரிசையால் நோக்க வேண்டுமென்ற திருவள்ளுவரது உபாயத்தையனுசரிப்பதில் அவர் தவறியதில்லை. உணவுப் பஞ்சம் மிகுந்திருந்த காலத்தில் சிரிய முறையில் மாணவர்களுக்கு உணவளித்த முறையைப் போற்றுதாரில்லை.

## தெய்வபக்தி

மேனுட்டு நாகரீகத்தில் திளைத்துத் தம்மிளமைக் காலத்தை 'ருேயல்' கல்லூரியிற் கழித்த நவநாகரீக புருஷரொருவர் கடவுளிடத்து ஆராஅன்பும், தேவார திருவாசக பாராயணமும், மந்திர உபாசனையும் உடையவராவது அபூர்வமே. நம்மதிபர் தேவியுபாசனையுடன் தம் பிற்காலத்தைக் கழித்ததுடன் தோத்திரங்களைக் கண்ணீருகுத்துப் பாடிநிற்பதைப் பார்ப்பவரும் பரவசமடைவர். தேவியுபாசனையாற்றமக்கு மனச்சாந்தியும் ரோக சாந்தியும் உண்டாவதாகக் கூறுவர். அரசினர் கல்லூரியில் மதமென்பதே மணப்பதில்லை. ஆனுல் நமது அதிபரிருக்கும் கலாசாலையில் நவராத்திரி தினங்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். இதிலிருந்து அவரது ஆராவன்பு வெளியாகிறது. கடவுள் பக்தியுடன் மூட நம்பிக்கைகளை வெறுக்குமியல்பும் அவருக்குண்டு. இத்தகைய சிறந்த குணங்களெல்லாம் ஒருங்கே திரண்ட ஓர் குணக்குன்றை, பெருந்தகையை, சுடர்விளக்கை இழந்தமை ஆசிரிய உலகுக்கே ஓர் துரதிஷ்டமாகும். இப் பெரியாரது ஆத்மா சாந்தியுறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னகம், சர்வதாரி கார். கந.

— காந்தி ஆண்டு 80 —

## புதிய கல்வித் திட்டமும் வித்தியாசாலைகளும்

அரசினரின் புதிய கல்வித்திட்டம் அனுசரணைக்கு வந்து மூன்று வருடங்களாகின்றன. இதன் பேருக ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் நிலைமையையும் ஆராய்வது அவசியமாகும். இலவசக்கல்வியைக் கற்றுக் கொடுக்க உடன்பட்டதின் பேருக, ஆங்கில வித்தியாசாலைகளிலெல்லாம் மாணவர் தொகை பன்மடங்கு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அநேக ஆங்கில வித்தியாசாலைகள் விரும்பியபடி மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதியில்லாது தத்தளிக்கின்றன. இடவசதியோடு தளபாடங்களும் புதிதாகத்தேவையாகின்றன. இத்துடன் முடிவடைந்துவிட்டதா? அன்று; ஏற்ற ஆசிரியர்களைத் தேடிக்கொள்வதும் பிராண கஷ்டமாகின்றது. வருட வீதம் மாணவர் தொகை அதிகரித்துக் கொண்டுவர, செய்வது யாதென அறியாது வித்தியாசாலை அதிபர்கள் தடுமாற்றமடைகின்றனர்.

இலவசக்கல்வியின் பேருகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தேசபாஷையைக் கற்றுக் கொடுக்கும் வித்தியாசாலைகளில் மாணவர் தொகை அதிகரிப்பதாகத் தெரியவில்லை. இவ்வித்தியாசாலைகளிலுள்ள உயர்தர வகுப்புக்களில் மாணவர் கல்வி கற்க விரும்பாது, ஆங்கில பாடசாலைகட்கே ஓட்டம்பிடிக்கின்றனர். எனவே, கல்வியின் நோக்கம் எதுவாகுமென்று இலகுவில் தென்படுகின்றது. விரைவில் ஆங்கிலத்தைக் கற்றுவிட்டு, ஏதாவது உத்தியோகம் பெற்றுவிட நினைப்பதே இதற்கெல்லாம் காரணமாகும். கல்வியின் நோக்கம் உத்தியோகமன்று. போதிய அறிவைப் பெறுவதற்கும், அவ்வறிவைக்கொண்டு சீவியத்துக்கு உழைப்பதற்கும்ஏற்ற கல்வியையே அரசினர் கற்றுக்கொடுக்க எத்தனங்கள் செய்கின்றனர். அதுவரையும் வித்தியாசாலைகளில் தடுமாற்றங்கள் ஏற்படுவதை எவருந் தடுக்கவியலாது. கல்வி கற்பவர்கள் எல்லோருக்கும் அரசினர் உத்தியோகங்கள் வழங்குவதென்பது எங்கேயாவது — எப்போதாவது, கூடிய தொன்றன்று. பொது மக்கள், இப்பொழுது கல்வி முறையில் ஏற்படும் மாற்றங்களைப் பிழையாக விளங்கித் தலைதடுமாறுகின்றனர்.

இதுவரையும் ஆங்கில மொழி மூலமாகக் கற்றுக் கொடுக்கப்பட்டுவந்த கல்வி, இனித் தேசபாஷையிற் கற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் இதுவரையும் உத்தியோகத்தை இலக்காகக் கொண்டு கற்றுக்கொடுக்கப்பட்ட கல்வி, இனி அப்படியாகாது, அறிவுக்கும் சீவியத்துக்கும் ஆதாரமுடையதாகும். பல்வேறு தொழில் முறைகளை மாணவர் வித்தியாசாலைகளிலேயே கற்கும் வசதியைப் பெறப்போகின்றனர். போதிய ஆசிரியர்கள் இத்துறையிற் பயிற்றப்படாமையாற்ருன் இன்னும் வித்தியாசாலைகளில் தொழிற் கல்வி விருமபியளவு இடம்பெறவில்லை. அதனுற்ருன் உயர்தரக்கல்விக்கு அருகராகாத விவேகங் குறைந்த நூற்றுக்கணக்கான மாணவர் உத்தியோகத்தையே இலக்காகக் கொண்டு வகுப்புக்களிற் பல வருடங்களாக இடர்ப்படுவதைக் காண்கின்ருேம். இவர்களின் மூளை வன்மைக் கேற்ற தொழில் முறைக் கல்வி கற்றுக் கொடுப்பதாயின், அதனுல் ஏற்படும் பெரும் நன்மை இவ்வளவாகுமா? இம் மாணவர்களன்றித் தேசமும் எவ்வளவு நன்மையை அடையும். இம்முறையை அரசினர் அநுட்டானத்திற் கொண்டுவரும் வரையும் சங்கடங்கள் இருந்துகொண்டேவரும்.

கல்வி கற்றுக்கொடுக்கும் முறை ஆங்கில பாஷையிலிருந்து தேச பாஷைக்கு மாற்றப்படுங்கால் சில வருடங்கட்கு இவ்வித சங்கடங்கள் வந்தெய்துவது நிச்சயம். அத்துடன் நடுத்தர வித்தியாசாலைகளிற்ருனே மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அவர்கள் மூளைவன்மைக்கேற்ற கல்வியை வழங்கும் முறையும் அனுட்டானத்துக்கு வர வேண்டும். தீவிர விவேகம் படைத்த மாணவர்க்கு உயர்தரச் சர்வகலாசாலைக் கல்வியும், நடுத்தரமான விவேகம் உடையார்க்கு உயர்ந்த தொழிற் கல்வியும், சாதாரணமான மாணவர்கட்குச் சாதாரண தொழிற்கல்வியும் பயிற்றப்பட வேண்டும். அடுத்த சில வருடங்களுள் இவ்விதமானமுறையிற் கல்வி பயிற்ற அரசினர் ஒழுங்கு செய்யின், தற்போதைய தலை தடுமாற்றங்கள் நீங்குமென்பது நிச்சயம். மாணவர்களும் பெற்ருரும் நினைத்தபடியன்று; மாணவரின் மூளை வன்மைக்கேற்ற கல்வி எதுவென்று முடிவு செய்யும் உரிமை ஆசிரியர்கட்கே இருக்கவேண்டும். இவ்வாருகவே கல்வி முறை மேலைத் தேசங்களிலும் யப்பானிலும் அனுஷ்டிக்கப்படுவதைநாம்காணலாம். ஐந்துவருடத்துள் இம்முறையானகல்வி பூரண நிலையயடையுமென்பது கல்வி நிபுணர்களின் அபிப்பிராயம். அதுவரையும் நாம் பொறுத்திருக்க வேண்டியதுதான். இலவசக் கல்வி முறையையும், தேச பாஷைக் கல்வியையும் குறை கூறுவதால் வரும் பயன் ஒன்றுமில்லை.

## இன்னும்வகுப்புவாதமா?

அடுத்த வருடத் தொடக்கம் யாழ்ப்பாணப் பட்டினம் ஒரு நகரசபையாற் பரிபாலிக்கப்படவிருக்கின்றது. அடுத்த மாத நடுப்பகுதியில் இந் நகரசபை அங்கத்தவர்களின் தேர்தல் நடைபெற ஆயத்தங்கள் துரிதமாக நடைபெறுகின்றன. இத் தேர்தலிற் பங்கு பற்றும் கட்சிகளில் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபனமும் ஒன்று. இந்த வகுப்புவாதக் கட்சி இப்போது இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்துவிட்டது. மந்திரிப் பதவிகளையும் இக் கட்சியினர் பெற்றுவிட்டனர். இதுவரையும் எதிர்க்கட்சியில் இருந்த இவர்கட்கு இப்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் வரிசையிற் புதிய ஆசனங்களும் அளிக்கப்பட்டன. தேசாளுமன்றத்தில் இக்கட்சியின் நிலை இவ்வாருக, யாழ்ப்பாணத்தில் மறுபடியும் தமிழ்க் காங்கிரஸ் என்ற வகுப்புவாதப் பட்டையத்துடன் இவர்கள் நகரசபைத் தேர்தலிற் பங்கு பற்றுவது எப்படிப் பொருந்துமோ? இவர்களை எதிர்ப்பதாகிய பழையகொள்கையையா இன்னும் எடுத்துரைக்கப் போகின்றனர்? புதிய விலாசத்துடன் எல்லா வகுப்பினரும் சாதியினரும் சேர்ந்து உழைக்கக்கூடிய ஸ்தாபனமொன்று நிறுவினுல் என்ன தீமை வந்துவிடுமோ? நகரசபை பரிபாலனங்களிலும் வகுப்புத் துவேஷம் பாராட்டவேண்டுமா? இவ்விஷயத்தைத் தலைவர்கள் யோசிக்காதது பற்றி நாம் கவலையடைகின்ருேம். தேசாளுமன்றத்தில் தமிழ்க்காங்கிரஸ் தேசீயத்தை மேற்கொள்ள, நகரசங்கத்தில் வகுப்புவாதப் பெயருடன் நிலைபெறுவதா? யாழ்ப்பாணத் தமிழன் இன்னும் ஏமாந்துபோவதாயின், அதிலும் பெரிய [illegible] கம் வேறு யாது? தேசாளுமன்றத் தேர்தற்போது தமிழன் நம்பியதும், எண்ணியதும், கையாண்டதும், தலை நிமிர்ந்து நின்றதும் பின் என்னவாயிற்று? இதன் பின்னுவது தேசிய முறையில் நடந்துகொள்ள வேண்டாமா? நகர மக்களாவது இவ்விஷயத்தைச் சிந்தித்துத் தலைதடுமாறிய சுயநல வேட்டைக்காரருக்கு நற்புத்தி புகட்டப்படாதா?


## பெற்றேல் கட்டுப்பாடு

பெற்ருேல் கட்டுப்பாடு தளர்த்தப்பெற்று இன்னும் ஒரு வருடமாகவில்லை. மறுபடி அக் கட்டுப்பாடு ஏற்படும்போலிருக்கின்றது. அரசினர் கையாளும் ஆயத்தங்களை நோக்கின், அடுத்த வருட முற் பகுதியுடன் அக் கட்டுப்பாடு வந்தேயாகும்போலிருக்கின்றது. போதிய பெற்ருேல் கிடைப்பது அரிதாயிருக்கின்றமையாற்ருன் கட்டுப்பாடு வருவதாக அறிகின்ருேம். பெற்ருேல் பெறப்படும் நாடுகளிலிருந்து அதனைக் காலத்தில் கொண்டுவந்து சேர்ப்பதற்குக் கப்பல்கள் கிடைக்கின்றனவில்லை. அத்துடன் நாட்டிலும் மட்டு மதியமின்றிப் பெற்ருேல் உபயோகிக்கப்படுகின்றது. யுத்தகாலத்தில் மாதவீதம் பதினைந்து லட்சம் கலன் பெற்ருேல் இலங்கையில் உபயோகிக்கப்பட்டது. இப்போது இருபது லட்சம் கலன பெற்ருேல் மாதவீதம் செலவாகின்றது. அவசியமில்லாத முறையில் விநியோகிக்கப்படுகின்றதென்பது அரசினர் கருத்து. இதனுல் பெருந் தொகைப் பணம் நாட்டிலிருந்து வெளியே செல்லவேண்டியதாகின்றதாம். இதற்காகத்தான் பெற்ருேல் கட்டுப்பாட்டினை அரசினர் கொண்டுவர யோசிக்கின்றனர். கட்டுப்பாடு வந்தவுடன் பெற்ருேல் வியாபாரஞ் செய்யும் கள்ளச் சந்தையும் ஏற்பட்டுவிடும். இதன்பேருகப் பல உத்தியோகஸ்தரும் பணஞ் சம்பாதிக்க ஆரம்பித்துவிடுவர் என்பதும் நிச்சயம். கட்டுப்பாட்டினுல் ஏற்படவிருக்கும் நன்மையிலும் அதனுல் ஏற்படும் தீமைகளே அதிகமென்போம். அதுவுமன்றிக் கட்டுப்பாட்டு ஒழுங்குகளைச் செய்து நிறைவேற்ற அரசினர் செலவிட வேண்டிய பணமும் இம்மாத்திரமன்று. எனவே, அரசினர் இக் கட்டுப்பாட்டினைச் கொண்டுவரமுன், வேறு முறைகளைக் கையாளப்படாதா என்று கேட்கின்ருேம். அவசியமின்றி அளவு கணக்கில்லாத லொறிகளும், கார்களும் நாட்டில் மிகப் பெருகிவிட்டன. இவைகளின் தொகையைக் கட்டுப்படுத்தின் பெரு நன்மையாகுமே. அத்துடன் குறிக்கப்பட்ட எல்லைக்குள் இவ்வளவு லொறிகள், பஸ்கள் மாத்திரம் உபயோகத்திலிருக்கலாமென்ற கட்டுப்பாட்டினையும் கொண்டுவரலாம். அப்படியன்றிப் பெற்ருேல் கட்டுப் படுத்தப்படின் அநேக ஊழல்கள் ஏற்படுவது நிச்சயம்.

## இலங்கையைப் புறக்கணிப்பதா ?

ஐக்கியநாடுகள் சங்கத்தில் இலங்கையை ஒரு அங்கத்தினராகச் சேர்த்து விடுதல் இலங்கைக்கு மட்டும் ஒரு பெரிய அநீதியல்ல; ஆசிய நாடுகள் அனைத்துக்குமே இது ஒரு மகத்தான அநீதியாகுமென அவுஸ்திரேலிய பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மை அரசியல் சபையிற் கூறினர். 12 நாடுகளின் விண்ணப்பப் பத்திரங்களைப்பற்றிக் குறித்து சபை ஆலோசனை செய்து வருகிறது. அவுஸ்திரேலிய பிரதிநிதி தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

அதிகமான தகவல்களைக் கோரி சோவியத் யூனியனும் [illegible] இலங்கையின் விண்ணப்பப் பத்திரத்தை நிராகரித்து விட்டன.




சுதந்திரம் பெற்ற இலங்கை தனது ஓராண்டுப் பூர்த்திவிழாவைச் சகல ஆடம்பரங்களுடனுங் கொண்டாடுவதற்குத் திட்டம் போட்டுள்ளது. இதை முன்னிட்டு நான்கு விசேஷ முத்திரைகள் வெளியிடப்படுமென அறிகின்றேன். முத்திரை வெளியிடும் விஷயத்தில் ஐம்பதுக்கைம்பது பின்னம் அனுஷ்டிக்கப்படும்! இரு முத்திரைகளில் வாள்தாங்கிய சிங்கக் கொடி பொறிக்கப்படும். எஞ்சிய இரண்டிலும் பிரதமர் சேனநாயகாவின் உருவப் படம் கவின்பெற அமைக்கப்படும்,

சேனநாயகா புகழுடன் வாழப் பிறந்த ஒரு அதிர்ஷ்டசாலி. எத்தனையோ உத்தமர்கள் தங்கள் முகங்களை முத்திரைகளில் பார்க்க முன்னர் மறைந்துவிட்டனர். ஆனுல் ஸ்ரீ சேனநாயகா உயிருடன் இருந்துகொண்டு சகல பெருமைகளையுங் கண்டுங் கேட்டும் அனுபவிக்கிருர்.

### பாஸிஸ்ட் ஆட்சியா?

இலங்கையில் அப்பழுக்கற்ற ஜனநாயக ஆட்சி நடைபெற்றுவருவதாக எங்கும பேசப்படுகின்றது. லண்டன் சென்ற எங்கள் பிரதமர் கூட இலங்கை என்றுமே, நீதிக்காகவும், தர்மத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் உழைத்து வருமெனப் பறைசாற்றி விட்டுத் தட்டுமுட்டின்றி ஊர் திரும்பியுள்ளார்.

ஆனுற் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற உபதேர்தலிலே தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஒருவரான ஸ்ரீ பி. சரவணமுத்து அவர்களின் பேச்சைக் கவனிக்கும்போது, இலங்கையில் ஜனநாயக ஆட்சி இல்லையென்றே கருத வேண்டியிருக்கின்றது. இடதுசாரிகளைக் கேட்டால், அவர்கள் இலங்கையிற் பாஸிஸ்ட் ஆட்சி தலைவிரித்தாடுகின்றதெனக் கூறுகின்ருர்கள். இந்த அழகில் இலங்கையிற் சகல விதமான ஆட்சியும் நடைபெறுகின்றதாகவே எண்ண வேண்டியிருக்கின்றது.

### நகரசபைகள்

இன்னுஞ் சில வாரகாலத்துக்குள் யாழ்ப்பாணம், நுவரேலியா, குருனுக்கல் என்ற நகரங்கள் நகரசபை அந்தஸ்தைப் பெற்றுவிடும். இதைத் தொடர்ந்து 1950-ம் ஆண்டில் நீர்கொழும்பும் திருகோணமலையும் முற்கூறிய நகரங்களுடன் தோழமை பூண்டு கொள்ளும்!

நீர்கொழும்பு இலங்கையிலுள்ள மிகப்பழைய பட்டின சபையாகும். இது இந்த அந்தஸ்தை 1922-ல் அடைந்தது. யாழ்ப்பாணம் 1923-ம் ஆண்டில் பட்டின சபையாயிற்று. இப்பட்டின சபைகளுள் யாழ்ப்பாணத்துக்கு அதிக வருமானம் உண்டு.

யாழ்ப்பாணம் இனி, நகரசபையாக மாறும் போது நாட்டுமக்களின் உள்ளப்பாங்கும விரிவடைந்து மாற்றம் பெறுமென எதிர்பார்க்க இடமுண்டு அல்லவா?

### யூ. என். பீ. யுவர்

யூ. என். பி. கட்சியில் இப்போது வாலிபர்களுக்கான ஒரு கிளையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவர்கள் கொழும்பில் நடைபெற்ற உப தேர்தலின்போது மும்முரமாக முயற்சித்தார்கள் என அறிகின்றேன். கொழும்பிலுள்ள யூ என். பி வாலிபர்களிலும் பார்க்கப் பிற இடங்களிலிருந்து வந்தவர்களே உயிரையுங் கவனியாது வேலை செய்தார்களாம். இவர்கள் அனைவரும் நவலங்காவின் எதிர்காலத்து மன்னர்களல்லவா?

### யார் குற்றவாளி?

யப்பானின் பழைய பிரதமர் யுத்தத்தை மூட்டிய குற்றத்துக்காகத் தூக்கு மேடை ஏறப்போகிருர். யுத்தம் மகா பயங்கரமான பூதந்தான். இது ஒருபுறமிருக்க, ஒரு சில மேற்றிசை நிபுணர்கள் யப்பானில் அணுக்குண்டைப் பிரயோகித்துப் பச்சைக் குழந்தைகளையும் நாட்டு மக்களையும் சாம்பராக்கினர்கள் அல்லவா? இக்குற்றம் யாருடையது? இதற்கும் சேர்த்துத்தான் டோஜோ தூக்கிடப்படுகின்ருரா என்பதை அணுக்குண்டு அம்பி அறிய விரும்புகின்ருன்.

### நஞுணநமன

"......இலங்கைத் தேசிய கீதம் இன்னது என்று அறியாத ஒரு நாடகக் கலைஞர்கள் தாம் சில வாரங்கட்கு முன்னர் நடித்த நாடக முடிவிலே "நஞுணநமன அதிநாயக ஜயஹே" என்ற இந்திய தேசிய கீதத்தைப் பாடி, நாடகத்தை முடித்ததாக ஒரு அன்பர் ஆத்திரமாக எனக்கு எழுதியிருக்கிருர். இதைப்பற்றிக் கொழும்பு தினசரியொன்றிலே கூட ஒரு கடிதம் வெளியாகி யிருந்ததைப் பார்த்தேன். ஆனுல் விஷயம் தெரிந்தவர்கள் செய்த குற்றத்தை விஷயம் தெரியாதவர்கள் பொறுத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை......

## அவுஸ்திரேலியா மகாநாடு

### இலங்கையிலிருந்து பிரதிநிதிகள்

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் ஆதரவில் அவுஸ்திரேலியாவில் நடைபெற விருக்கும் ஆசிய — தூரகிழக்கு நாடுகளின் பொருளாதார விசாரணைச்சபையின் மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து ஸ்ரீ ஏ. என். எல். ஜான்ஸ் ஸி. ஸி. எஸ். அவர்களும், ஸ்ரீ பி. ஆர். தேவராஜன் ஸி. ஸி. எஸ். அவர்களும் விமான மார்க்கமாக இம்மாதம் 24-ந் திகதி புறப்பட்டனர். மகாநாடு 29-ந் திகதி நடைபெறும்.

அவுஸ்திரேலியாவிலிருந்து ஸ்ரீ தேவராஜன் நியூசிலந்துக்குப் பிரயாணமாவார். அங்கு அவர் அரசாங்கம் நடாத்தும் நிதிச் சேமிப்பு, வீமாக்கம்பனி என்பனவற்றின் நிர்வாக முறைகளை நேரிற் கண்டு அறிந்துகொள்ளுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கையாற் பயனென்?

## பாகிஸ்தானுக்கு ஆதரவு

ஐக்கிய நாடுகளின் சங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையினர் காஷ்மீர் விஷயமாகத் தமது அறிக்கையை வெளியாக்கிவிட்டனர். விசாரணை செய்தபின் இவர்கள் ஐரோப்பா சென்று மூன்று மாதங்களாகிவிட்டன. இப்போது தான் குறித்த அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையால் ஏதாவது நன்மை உண்டாகுமோ என்பது சந்தேகத்துக்கிடமாகின்றது. நடந்த சம்பவங்களை எடுத்து இவ்வறிக்கை விரிக்கிறதே யன்றித் தமது முடிவுகளை எடுத்துரைக்கவில்லை. இந்திய அரசினரா, அல்லது பாகிஸ்தான அரசினரா தவறு செய்தனர், செய்துவருகின்றன ரென்று கூறவுமில்லை. இரண்டு அரசினர்க்கும் ஏற்றதாக ஒரு திட்டம் வகுத்துக்காஷ்மீர்வாசிகளின் சன சம்மதத்தை அறியவேண்டுமாம். இத்திட்டத்தை யாவர் வகுப்பது. இருவரும் இணங்காவிடத்து இவ் விசாரணைச் சபையினரல்லவோ செய்யவேண்டும். இவ்வளவு காலமும் விசாரணை செய்து கண்ட பயன் இதுவா?

### பிழையெனக் கண்டும்

பாகிஸ்தான் அரசினர் தமது சேனைகள் காஷ்மீரில் இல்லையெனப் பிடிவாதயாக வாதிக்கின்றனர். ஆனால் இந்த விசாரணைச் சபையினர் அவர் சேனைகளைக் காஷ்மீரில் நேரே கண்டனர். அதன் பின் பாகிஸ்தான் அரசினரும் அதனை ஒப்புக்கொண்டனர். இதன்பின் மேற்படி விசாரணைச் சபையினர் காஷ்மீரில் யுத்தத்தை நிறுத்துவதற்கெனச் சமர்ப்பித்த திட்டத்தை இந்திய அரசினர் ஏற்றனர். பாகிஸ்தான் அரசினர் ஏற்கவில்லை. இவ் விசாரணைச் சங்கத்தின் வழுவழுப்பான முடிவுகளே இந்தப் பரிதாப நிலைக்குக் காரணமாகும் திடமாக நின்று உறுதியான முடிவுகளைச் செய்யின் பாகிஸ்தான் வழிப்படாது போகுமா? எல்லாம் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் இடங்கேடுதான்.

### பயமுறுத்துகின்றது

கடைசியாகப் பாகிஸ்தான் இந்தியாவைப் பயமுறுத்தவும் ஆரம்பித்துவிட்டது. இந்திய அரசினர் மேலும் மேலும் சேனைகளைக் காஷ்மீர் சமஸ்தானத்துக்கு அனுப்புவதால் தாமும் அப்படிச் செய்ய நேரிடுமென்று பயமுறுத்துகின்றனர். இந்திய அரசினர் நேற்று இன்று சேனைகளை அனுப்பவில்லை. சென்றஒரு வருடமாகவே இந்திய சைனியங்கள் அங்கு நின்று யுத்தஞ் செய்கின்றன. பாகிஸ்தான் சேனைகள்தான் ஒளிப்பு மறைவாக நின்று யுத்தஞ் செய்கின்றன. இந்த வெருட்டுக்கு இந்திய அரசினரா அஞ்சுகின்றவர். யுத்தம் ஏற்படினும் ஆண்மையோடு எதிர்த்து நின்று செய்யத் தயார். ஹைதராபாத் அடைந்தகதியையே பாகிஸ்தான் அடையுமென்பதும் நிச்சயம். ஐக்கிய நாடுகளின் சங்கம் நன்ருக உண்மையை அறிந்தும் இன்னும் ஒரு முடிவுக்கும் வாரிருப்பதுதான் பெரிய நூதனமாகும். பாகிஸ்தானைத் திருப்திப்படுத்தப் பார்த்தால் பெரிய இந்தியாவின் துவேஷத்தை அடைவதாகுமே. இது புத்திசாதுரியமானதா?

### கிழக்கு வங்காளம்

இங்கு வாழும் இந்துக்களின் நிலை மிக்க பரிதாபமான கதியை அடைந்துளது. இப்போது பாகிஸ்தான் பிரதம மந்திரியாகும் லியாகத் அலி கான் இப்பிரதேசத்திற் சுற்றுப் பிரயாணஞ் செய்கின்றார். முஸ்லீம்கள் அங்கு வசிக்கும் இந்துக்களை நாடு கடத்த முயல்வது எவ்வளவு அநியாயச் செய்கையாகும். அதிக தொகையினர் சிறு தொகையினரை இப்படிச் செய்வது கெட்டித்தனமாகுமா? இந்தியாவிலுள்ள முஸ்லீம்களை இப்படி அடித்துத் துரத்தவியலாதா? ஆனால் இந்திய அரசினரும் இதற்கு இடங்கொடுக்கமாட்டார். இந்துக்களும் இச்செய்கைகளைச் செய்ய எண்ண மாட்டார். கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்ட அமளியை இரண்டுவிதமாகத் தடுக்கலாம். முதலாவது பொதுசன அபிப்பிராயம் இந்துக்களுக்குச் சாதகமாக ஏற்படவேண்டும். இரண்டாவதாகப் பாகிஸ்தான் அரசினர் திடமான நடபடிக்கைகளைக் கையாளவேண்டும். இரண்டு மில்லாது போனுல் நடப்பதுயாது? இந்துக்கள் நாட்டைவிட்டுஓட வேண்டியதுதான்.

### ஹைதராபாத்

இச்சமஸ்தான விஷயங்கள் நன்னிலையை அடைந்து வருவது பெரிதும் மெச்சற்பாலது. இராணுவ அரசியலை நடாத்தும் மேஜர் சௌத்திரியின நீதி திறம்பா அரசியலே இதற்கு மூல

**- இந்தியா -**

காரணம். முன் நடந்த அக்கிரமங்கட்குப் பரிகாரம் செய்வதில் அரசினர்க்குப் பெரிய வேலைகள் இருக்கின்றன. லயிக் அலி என்பவரின் மந்திரிப்பதவியில்நிகழ்ந்த எத்தனையோ தீமைகள் உள. அவற்றை நீக்கி நிதானப்படுத்துவதென்பது இலகுவான விஷயமன்று. இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன் வேலையினின்று நீக்கப்பட்ட அநேகருக்கு மீண்டும் உத்தியோகம் வழங்கப் பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்துக்கு மாருக நின்றோர் அநேகர் பதவிகளினின்று விலக்கப்பட வேண்டியதாயிற்று. முன்னிருந்த மந்திரிமார்களை நீதிமன்றத்தில் விளக்கித் தண்டிக்க வேண்டுமா என்ற விஷயம் இந்திய அரசினரால் ஆலோசிக்கப் படுகின்றது. கலகக்காரரின் தலைவராகவிருந்து அளப்பருங் கொடுமைகளை விளைத்த கஜிம் இரஸ்வியின் கதி யாதாக வேண்டும் என்பதும் முடிவுசெய்யப்பட வேண்டும். அத்துடன் சிறையாக்கப் பட்ட 8000 இரஸ்கார்ஸ் என்னும் படைவீரரும் உளர். இவர்களைப்பற்றியும் முடிவுக்கு வரவேண்டும். இன்னுஞ் சில மாதங்களில் இராணுவ அரசியல் நீங்கிச் சாதாரண ஆட்சி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆசிரியர்கள் விழித்தெழல் வேண்டும்?

வலிகாமம் கிழக்கு ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பகுதிவித்தியாதரிசி திரு. எஸ். யு. சோமசேகரம் எம். ஏ. கூறியதாவது :-

"இலங்கைத் தேசம் சுதந்தரத்தை யடைந்ததுடன் இலங்கையின் கல்வி விருத்தியை நடத்திவந்த அன்னியரின் ஆதிக்கமும் அகன்றுவிட்டது. குறித்த கட்சியினர் அல்லது அதிகாரலர்க்கத்தினர் தமது எண்ணத்தை நிறைவேற்றுவதும் இயலாததாய் விட்டது. சிங்களர் தமிழர் என்னும் இரு பெரிய சாதியினரின் பரம்பரைக்கும் பெருமைக்கும் ஏற்ற கல்வியைக் கற்றுக்கொடுக்கும் நோக்கமாகச் தேசிய அரசாங்கத்தினர் கல்வித்திட்டமொன்று வகுக்கின்றனர். அனுபோகத்தில் பயன்படக்கூடிய கல்வியே கற்றுக்கொடுக்கவேண்டும்; அன்றேல் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப்பயங்கரமான நிலையை அடையுமென்பது நிச்சயம். புத்தகக் கல்விமாத்திரம் போதாது. நம்மை எதிர் நோக்கிவரும் புதிய நிலைமைகட்கு ஏற்ப நம்மை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்."

வட இலங்கை ஆசிரிய சங்கத்து உதவிக் காரியதரிசியாகும் திரு. சி. மாணிக்கவாசகர் கூறியதாவது:—

"உயர்தரக் கலாசாலைகளின் தலைமையாசிரியர்கள் சிலர் இலவசக் கல்வித்திட்டத்தை முற்ருகத் தொலைத்துவிட முயல்கின்றனர். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விஷயம். எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் யாவரும் ஒற்றுமையடைந்து, வட இலங்கை ஆசிரிய சங்கத்தை உறுதிப்படுத்தி அதிகாரக் குழுவினர் செய்யுஞ் சூழ்ச்சிகளைத் தி[illegible]பது இன்றியமை[illegible]ரக்கணக்கான ஏழைமாணவர்கட்குப் பெரிய உதவியாகவிருக்கும். இந்த இலவசக் கல்வித்திட்டம் அவம்போகாதிருக்கச் செய்வது ஆசிரியர்களின் பிரதம கடமையாகும். இலங்கை உபாத்தியாயினிகளின் சபை ஓர் தொழிற் சங்கமாகத் தன்னைப் பதிவு செய்ததும் மற்றைய ஆசிரியர்கட்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

### அகில உலகக் குழந்தைகள் படக்காட்சி

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் ஆதரவில் உலகக் குழந்தைகளுக்காக உதவி நிதி திரட்டப் படுகின்றது. இந்நிதிக்காக யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் அடுத்தமாதம் 4-ந் திகதி 'வஞந்திர அகோரம்' என்ற படம் காட்டப்படும். மாலை 3 மணிக்கும் இரவு 6 மணிக்குமாக இரு காட்சிகள் நடைபெறும்.

### தேகவியோகம்

**திரு. சி. நல்லதம்பி**

வயாவிளான் வாசரும், 'சுதேசநாட்டிய' ஆசிரியரும், 'ஆனந்தகுமரன் அச்சியந்திரசாலை'ச் சொந்தக்காரரும், சுதேச வைத்தியரும் ஆகிய திரு. சி. நல்லதம்பி அவர்கள் சென்ற 24-ந் திகதி புதன் கிழமை தேகவியோகமாயினர். இவரின் ஈமக் கிரியைகள் அடுத்த நாளாகிய வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றன.

கடவுட் பத்தியும், தண்ணளி, பரோபகாரம் ஆகிய சுகுணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவர்.

இவரின் பிரிவாற் துயருறும் குடும்பத்தினருக்கும், இனபந்துக்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். இவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

### ஜனநாயகத்து அரக்கர்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சகலவிதமான பொதுவிஷயங்களுக்கும் எம்மிடம் நிபுணர்களுளர். அப்படியானுல் அரசாங்க நிர்வாகத்தின் கதியென்ன? மந்திரிமார்கூடத் தங்களின் பொறுப்பிலுள்ள பகுதிகளுக்கு நிபுணர்களின் உதவிகளைப் பெற அவாவுகின்றனர். இவர்களும் மந்திரிமாருக்குப் புத்திமதி கூறுவதில் அனுபவம் பெற்ற நிபுணர்களை வரவழைக்கலாமல்லவா? இதற்காக நாம் வெளிநாடுகளுக்கு யாத்திரை செய்வோமாயின் எத்தனையோ மகா வித்துவான்களைப் பிடித்துக்கொண்டு வரலாம். இங்கிலாந்திற் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது திறமைவாய்ந்த எத்தனையோ மந்திரிமார் தோல்வியடைந்தனர். இவர்கள் யுத்த காலத்தில் நல்ல முயற்சி செய்து வெற்றி கண்டவர்கள். இப்போது இவர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். இவர்களிற் சிலரை இலங்கைக்கு அழைத்து அவர்களின் புத்திமதிகளை எங்கள் மந்திரிமார் பெற்றுக்கொள்ளலாமே?

#### மேதையாகும் விந்தை

ஆனல், இது ஸ்ரீலங்காவிலுள்ள ஜனநாயக வாதிகளின் மேதையைப் பாதித்துவிடும். நாட்டு மக்களின் குரலுக்குச் செவிசாய்த்து ஒருவர் மந்திரிப் பதவியை வகிக்கின்றார். இவர் உடனே ஒரு நிபுணனுகிவிடுகின்றார். மந்திரியாக அவர் விளங்க முன்னர் எங்கள் மத்தியில் அவர் ஊடாடித் திரியும்போது அவர் எங்களைப்போல ஒரு சாதாரண மனிதனுகவே காணப்பட்டார். இவர் தமது சொந்த விஷயங்களில் எத்தனையோ பிழையான காரியங்களைச் செய்து, தம்மைத்தாமே குட்டிச்சுவராக்கியவராகவும் இருக்கலாம். ஆனல் என்று மக்களின் வேண்டுகோளை ஆதரித்து மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளுகின்ருரோ, அன்றிருந்தே அவர் ஒரு மேதையாகிவிடுவதுடன் மந்திரித் தொழிலிலும் பரிபக்குவம் பெற்றுவிடுகின்ருர். ஆகவே, ஒரு சுபதினத்தில் ஒருவர் விவசாயத் துறையில் மகா நிபுணராகிவிடுகின்ருர். வேறொருவர் நிதிநிர்வாகத்தில் நிபுணனுகிவிடுகின்ருர். இதே போன்று, கல்வி, வர்த்தகம், தொழில், உணவு என்ற பல்வேறு துறைகளிலும் பலர் திறமைசாலிகளாகிவிடுகின்றனர்.

பழைய காலத்து ஸ்ரீலங்காவுக்கும் நவலங்காவுக்கும் இவ்வளவுதான் வித்தியாசம். அந்தக் காலத்து மக்கள் அரக்கர்களைக் கொண்டு பெரிய பெரிய வேலைகளைச் செய்வித்தனர். இன்று மந்திரிமாரைக் கொண்டு அந்த வேலைகளைச் செய்து முடிக்கின்றோம். இவர்கள் யாவரும் நிபுணர்கள். ஆம்; ஜனநாயகத்தின் அரக்கர்கள்.

### சேர் பொன் இராமநாதன் குருபூசை

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் குருபூசை இராமநாதன் கல்லூரி சைவ மங்கையர் சபையாரால் மேற்படி கல்லூரியில் டிசம்பர் 5-ந் திகதி கொண்டாடப்படும்.



### நமது வாசிகசாலை

**கலைமகள்:** தீபாவளி இதழ் ஆசிரியர்: கி. வா. ஜெகந்நாதன்; விலாசம்: மயிலாப்பூர், சென்னை; விலை: தனிப்பிரதி ரூ. 1-8-0.

பழமையும் புதுமையும் பொலிந்து விளங்கும் கலைமகள் தீபாவளி இதழிற் படிப்பதற்கு நல்ல விஷயங்களும் பார்த்து அனுபவிப்பதற்கு அழகிய சித்திரங்களுமுள. கவிமணியும் நாமக்கல் கவிஞரும் கீர்த்தனங்கள் பாடியுள்ளனர். திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. மு. வரதராசன், திரு. வையாபுரிப்பிள்ளை ஆதியோர் இலக்கியக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இருவகை இலக்கியம் என்ற தலைப்பில் கலையையும் சாஸ்திரத்தையும் விளக்கியுள்ளார், திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள். சரித்திர நிர்மாணத்துக்குரிய கருவிகளைப் பற்றி திரு. நீலகண்ட சாஸ்திரியாரும், உலக சமுதாயத்தைப் பற்றி திரு. சாமிநாத சர்மாவும் எழுதியுள்ளனர். இன்னும் கல்வி மந்திரி தி. சு. அவிநாசிலிங்கம், பெ. தூரன், ந. பிச்சமூர்த்தி, கி. ரா, 'ஆர்வி' கி. சந்திரசேகரன் ஆதியோரும் இதழை அணிசெய்கின்றனர்.

**ஹநுமான்:** தீபாவளி மலர். விலாசம்: ஸ்ரீ தியாகராஜா வீதி தி. நகர், சென்னை, தனிப்பிரதி விலை: அணு 8.

இவ்விசேஷ மலரிலே தலைசிறந்த ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், கதைகள் கட்டுரைகள் கவிதைகள் எழுதியுள்ளனர். இராமாயணப் பெருமாளிகைக்குள் வாசகர்களை அழைத்துச் செல்லுகின்ருர் திரு. எஸ் வையாபுரிப்பிள்ளையவர்கள். பி. ஸ்ரீ அவர்கள் திருவள்ளுவர் போதிக்கும் தியாக வாழ்க்கையை விளக்கியுள்ளார். 'சுகி' குகப்பிரியை, 'அகிலன்' பூவாளூர் சுந்தரராமன் 'கம்பதாஸன்' ஆதியோரும் இம்மலருக்குத் தங்கள் பங்குகளை உதவியுள்ளனர். சினிமா அனுபந்தமும் சேர்க்கப் பட்டுள்ளது.

**திரை உலகம்:** ஆசிரியர்: டி. கே. கோவிந்தன். விலாசம்: 52, ஜவேலாவீதி; திருச்சிராப்பள்ளி. விலை 4 அணு.

இவ்விதழில் ஸ்ரீ எஸ். வி. சகஸ்ரநாமம், எம். சோமசுந்தரம் முதலியோர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். 'அப்படிக் கேளுங்கோ' என்ற அம்சமுங் காணப்படுகின்றது.

**சக்திபிறக்குது:** இயற்றியவர் 'சுரபி'. பிரசுரம்: சக்தி காரியாலயம், சென்னை 14 விலை அணு 6.

சுயராச்சியப் பெருவாழ்வில் நம்பிக்கை கொண்ட 'சுரபி' அவர்கள் தமது உணர்ச்சிகளுக்குப் பல்வேறு உருவங்களைக் கொடுத்துக் கவிதை மூலம் அவற்றைத் தந்துள்ளார். 'சுதந்திரப்பயிர்'; 'சுதந்திரப்பட்டணம்'; 'ஆளப்பிறந்தோம்'; 'தாயின்மணிக்கொடி' போன்ற கவிதைகள் குழந்தைகளுக்கும் சக்தியுண்டாக்கும் தகைமை வாய்ந்தன. இச் சிறுநூல் கவின்பெற அச்சிடப்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவை தெருப்பாடலா?

## சன்மார்க்கசபையில் நாவலர் தினம்

மேற்படி விழா 24-11-48 புதன்கிழமை மாலை -30 மணியளவில் சன்மார்க்கசபை மண்டபத்தில் நிகழ்ந்தது. சபைத்தலைவர் திரு. கா. பொன்னையா அவர்கள் நாவலர் திருவருவப்படத்தைத் திறந்து வைக்குமாறும் கூட்டத்தைத் தலைமை தாங்கி நடாத்துமாறும் கேட்டுக்கொண்ட தற்கிணங்க பரமேசுவரக் கல்லூரி அதிபர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையுரையில் நாவலரின் சமயத்தொண்டு, தமிழ்த்தொண்டு, நாவலர் நைட்டிகப் பிரமச்சாரியத்தை மேற்கொண்ட காரணம், மடாதிபதிகள் நாவலரைக் கௌரவித்த விதம், நாவலரின் வாதப்பிரசங்கமகிமை, வசனநடை ஆக்கம் முதலியவற்றை விரித்து தமக்கியல்பாகவுள்ள ஆற்றொழுக்குப் போன்ற அழகிய தமிழில் ஓர் இனிய சொற்பொழிவு செய்து, நாவலரின் திருவுருவப்படத்தை பக்தி சிரத்தையுடன் திறந்து வைத்து நமஸ்கரித்து நின்றார். சபையோர் எழுந்து நிற்க நாவலர் புகழ் கூறும் பாடல்கள் பாடப்பட்டன.

பின், விளிசிட்டி சேர் கனக சபை வித்தியாசாலை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் 'இக்காலம் நீ வந்தால் புகழுவையோ இகழுவையோ யாவர் கண்டார்' என்ற எங்கள் புலவர் கூற்றைத் தம் விஷய பீடிகையாகக் கொண்டு, பல உதாரணங்கள் மூலம் இனிய சொற்பொழிவாற்றினார். தமது பிரசங்கத்தினிடையே, நாவலர் பிறந்த இந்த நாட்டிலே—நாவலர் அவர்களால் அதி உயர்ந்த நூல் என்று சிறப்பித்துக் கூறப்பட்ட கந்தபுராண முதலிய புராணங்களை நவீன வித்துவான்கள் சிலர் இகழ்வதையும், அறிஞர்களால் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவதும், நாவலர் அவர்களால் அதன் பெருமை நோக்கிப் பதிப்பிக்கப்பட்டதுமாகிய திருக்கோவையை, தெருப்பாடல்களோடு ஒப்பிட்டு திருக்கோவை போன்ற எத்தனையோ தெருக்கோவைகளைப் பாடுவேன் என வாய்கூசாது, அந்நவீன வித்துவான்கள் கூறுவதையும் கேட்டு யாழ்ப்பாண நாடு தனது காதுகளைப் பொத்திக்கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? என உணர்ச்சிததும்ப கூறி அவ்வித்துவான்கள் கூற்றைத் தக்க ஆதாரங்களுடன் மறுத்துக் கூறிச் சபையை மகிழ்வித்தார்.

மாவிட்டபுரம் ஆங்கிலபாடசாலை ஆசிரியர் பண்டித இ. நமசிவாய தேசிகர் அவர்கள் பழமையின் பெருமையையும் அதனை மதிக்க வேண்டிய அவசியத்தையும், வசனநடை ஆக்குதலில் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், நாவலர் வசன நடையின் தந்தையாகிய தன்மையையும், விளக்கி, ஒருவரின் புகழை அளக்கும் கருவிகள், i அவர் புகழ் பாவிய இடம் ii புகழ் பாவியிருந்த காலம் என்பனவேயென்றும் அவ்விரண்டு அளவு கருவிகள் மூலம் நாவலரின் புகழும் வசனநடை இயல்பும் முதன்மைஸ்தானம் பெற்றனவென்பதைச் சிறந்த முறையில் விளக்கினார். காரியதரிசியால் நன்றியுரை கூறப்பட்டது. தேவார பாராயணத்துடன் கூட்டம் 9.30 மணிக்கு நிறைவெய்தியது.

## தமிழன்பர்களுக்கு வேண்டுகோள்

காங்கேசன் துறை—காசநோய் வைத்திய சாலையிலுள்ள அன்பர்கள் பின்வரும் வேண்டுகோளை அனுப்பியுள்ளனர்:

காங்கேசன் துறை சனிற்றோறியத்தில் இருக்கும் தமிழ் நோயாளிகளாகிய நாங்கள் இடை நேரங்களில் வாசிப்பதற்கு ஏற்ற தமிழ்ப் புஸ்தகங்கள் இல்லாது இடர்ப்படுகின்றோம். அன்பர்கள் கருணை கூர்ந்து இயன்ற தமிழ்ப் புஸ்தகங்களை "தமிழ் வாசிகசாலை, சனிற்றோறியம், காங்கேசன் துறை" என்ற விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் பெரும் உபகாரமாக இருக்கும். அனுப்பப்படும் புஸ்தகங்கள் நாவல்களாகவும், சரித்திரசம்பந்தமான நூல்களாகவும், சமயசம்பந்தமானவைகளாகவும் இலகுவான செய்யுட் பகுதிகளாகவும் இருப்பது நன்று.

## அகில உலகக் குழந்தைகள் உதவி நிதி நாடகம்

அகில உலகக் குழந்தைகளுக்கு உதவுவதற்குப் பணம் சேகரிப்பதற்காக 11-12-48 மாலை 6-30 மணியளவில், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில், ஒறியன்ற் றிக்றியேஷன் சபையாரால் இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பேராசிரியர் டொக்டர் கணபதிப்பிள்ளையவர்கள் எழுதிய உடையார் மிடுக்கு என்னும் நாடகம், வலி-கிழக்கு காரியாதிகாரி ஸ்ரீ தி. முருகேசபிள்ளை ஆதரவில் நடிக்கப்படும்.

இந் நாடகத்தில், ஸ்ரீமான்கள் கே. சொர்ணலிங்கம், செ. சண்முகநாதன், கே. செல்வரத்தினம், வீ. வீரகத்திப்பிள்ளை நல்லையா முதலிய பல நடிகர்கள் நடிப்பார்கள்.

## நாவலர் திருநாள்

### தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரித் தமிழ்மன்றம்

மேற்படி விழா மன்றத் தலைவர் திரு. து. ஜெயரத்தினம் அவர்கள் தலைமையில் பூசையுடன் (23-11-48) மாலை ஆரம்பமானது. தலைவர் முன்னுரை கூறியபின் மாணவர்களிடையே நாவலரைப்பற்றி வைத்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களாகிய திரு. விசுவநாதன், திரு. பத்மநாதன் அவர்களால் சபையோர் போற்றும்படி பேசப்பட்டது. பின் வித்துவான், சி. ஆறுமுகம் அவர்கள், திரு. செ. சின்னத்துரை அவர்கள், வித்துவான் நா. சிவபாதசுந்தரம் அவர்கள் ஆகியோர் நாவலர் அவர்களின் அருமை பெருமைகளையும், செயல்களையும் உணர்ச்சி மிகப் பேசினர்.

—கடிதம்.

## சாவகச்சேரி நகர சங்கம்

### மூவருக்கு வெற்றி

சமீபத்தில் நடைபெற்ற சாவகச்சேரி நகரசபைப் புதிய போதுத் தேர்தலிற் பின்வரும் மூவர் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

நகர வட்டாரம்: ஸ்ரீ வி. மூத்துக்குமாரு.

சப்பச்சிமாவடி வட்டாரம்: ஸ்ரீ எஸ். கார்த்திகேசு.

கல்வயல் வட்டாரம்: ஸ்ரீ என். கனகசபை

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டோர்: ஸ்ரீமான்கள்: எஸ். கே. திரவியநாயகம், வி. கந்தையா, பி. தம்பிப்பிள்ளை,

நுணுவில் கிழக்கு, மேற்கு ஆகிய இரு வட்டாரங்களின் தெரிவு இம்மாதம் 27-ந் திகதி நடைபெற்றது

## இளவரசியின் குழந்தை ஜாதகம்

(சோதிடர் கே. எஸ். இராஜலிங்கம்)

| | | | |
|---|---|---|---|
| 9 | சந். ராகு | 11 | 12 |
| 8 | | | லக். |
| 7 | அசுபதி | | சனி |
| வி. | செ. | சூ. பு. கே. | சுக். |

எலிசபேத் இளவரசிக்கு 15-11-48ல் 2 மணி 44 நிமிஷத்துக்கு (G. M. T.) (இலங்கை நேரம் 9.14) ஆண்குழந்தை ஜெனித்தது. இதன் பலாபலனை யறியப்பலரும் அவாவுகின்றனர்.

ஒரு சிலர் குழந்தை கன்னி லக்கினம் எனக் கருதுகின்றனர். உண்மையில் பிள்ளை இத்தீவில் ஜனித்திருந்தால் லக்கினம் கன்னிதான்.

குழந்தை பிறந்த லக்கினம் கற்கடகம்.

1. லக்கினாதிபன் உச்ச கேந்திரம் கன்மவீட்டில் ராகுவுடன்
2. தனாதி லாபாதியுடன் நீச பங்கராஜ யோகம்.
3. வீரியத்தில் சுக்கிரன் நீச பங்கராஜ யோகம் குரு கேந்திரம்
4. சுக ஸ்தானத்தில் ரவி புதயோகம் சந்திர கேந்திரம்.
5. பூர்வ புண்ணியாதி சுய க்ஷேத்திரம்.
6 சத்துரு ஸ்தானத்தில் குரு-சத்துரு நாசம்.
7. களஸ்திராதி சிங்கத்தில் குரு நோக்கு.
8. ஆயுட்தனாதி சூரியன் வீட்டில் குரு நோக்கு.
9. பாக்கியாதி பாக்கியத்துக்கு பத்தில் ஆட்சி.
10. கன்மத்தில் லக்கினாதி குரு நோக்கு.
11. லாபாதி வீரியத்தில் நீச பங்கராஜ யோகம்.
12. கீர்த்தி ஸ்தானாதி சுக ஸ்தானம் சந்திர நோக்கு.

### பலாபலன்கள்

இக்காலம் அரச குழந்தைக்கு நடப்பது கேது திசை ராகு புத்தி, 3-2-49 வரை இக்காலத்தில் பாலாரிஷ்ட தோஷம் கண்டு நீங்கும். 3-2-49 முதல் 9-1-50 வரை குருபுத்தி. இக்காலத்தில் பிதாவுக்கும் பிள்ளைக்கும் பட்டம் பதவி உயர்ச்சி.

3 வயதுவரை பாலாரிஷ்டமும் மாதுரு வர்க்கத்தில் கவலையும் காட்டும். 3 வயதுமுதல் 23 வரை வெள்ளிதிசை. இக்காலத்தில் ஜாதகர் 4 பாஷைக்குமேற் கற்று, வெள்ளி திசைக்கடைசியில் காதல் வேட்டையாடுவார். விதியின் வலையில் சிக்குவர். வயது 23 முதல் 29 வரை இடையிடையே ரோகமும், சோகமும், யோகமுமுண்டு. 29 முதல் 39 வரை சந்திரன் பட்டத்தை சூடவேண்டிய காலம் இதில் சில தடையுண்டாகும்.

செவ்வாய் திசை, பிரபல்ய வாழ்வுடன் இஷ்டசித்தி.

விவாக காலத்தில் இவரின் மனோநிலை சிதற பெரிய தந்தையாரைப் போலாவாரோ எனக் கோள்கள் யோசிக்கின்றன.

ஆயுட் பாவகம் தீர்க்கம் பிள்ளைக்கு சர்வாபீஷ்டமுமுண்டாகட்டும்.

குறிப்பு: எங்கள் பிரதம மந்திரி சேனநாயகா அவர்களும் கற்கடகத்திலுதித்தவர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 3480

தெல்லிப்பழை கிழக்கு,
சுப்பிரமணியம் சிவக்கொழுந்து
வழக்காளி

தெல்லிப்பழை கிழக்கு,
தற்போது இளையதம்பி முத்து
யாழ்ப்பாணப்பட்டினம் பெரிய தெரு.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 3480-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1948-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 20-ந் திகதி (20-12-48) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை.**—முதல் வட்டி ரூபாய் 787-00-ம் இதில் ரூபாய் 700-00-க்கு 21-4-47 திகதி தொடக்கம் 9-7-48 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 265-22 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை "செருக்கத்தாவுடை" நிலப்பரப்பு ஒன்று (9-ம்) வீடும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை, கிழக்கு குறித்த வழக்காளிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். வடக்கு நன்னித்தம்பி காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். மேற்குத் தாமோதரி கந்தையாவுக்கும் நாகலிங்கம் கதிராமலைக்கும் சகோதரங்களுக்கும் சின்னத்தம்பி நாகலிங்கத்திற்குமுரிய ஆதனங்கள். தெற்கு முத்தையா செல்லையாவுக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும் இன்னும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் கிணற்றடியிலிருந்து வடக்கெல்லையருகாக கிழக்கேயிருக்கும் ஒழுங்கைக்கு போகும் மூன்றுமுழ அகலமுள்ள ஒழுங்கைப் பாவிப்புரித்தும்.

முற்பதிவு H $\frac{209}{282}$

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை 17-11-48

## திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணி

திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புதுக்கி அமைக்கும் இயக்கத்தை ஆதரித்து சமீபத்தில் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலின் மேற்குப் புறத்திலுள்ள மடத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இளைப்பாறிய தமிழ்க்கல்வி மேற்பார்வையாளராகிய முதலியார், எஸ். கந்தையா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். கூட்டத்தில் பிரமுகர்கள் பலர் பேசினர். திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச் சபையின் கிளைச்சபையொன்று அவ்வமயம் அமைக்கப்பட்டது. இத்தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவருதற்கு திரு. எஸ். குமாரசூரியரவர்களைக் காரியதரிசியாகக்கொண்ட ஒரு நிர்வாகசபை அமைக்கப்பட்டது. —கடிதம்

## தமிழ்ப் பேச்சுப் போட்டி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர் தமிழ்ப் பேச்சுப் போட்டி புதன்கிழமை (17-11-48) கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மண்டூர் கோ. கோணேசபிள்ளை. முதலாம் பரிசும், ஏ. செபரத்தினம் இரண்டாவது பரிசும் பெற்றனர். —கடிதம்

## நிலாவெளி பொதுசன நிலையம்

### தேசத் தொண்டர்கள் கூட்டம்

20-11-48 சனிக்கிழமை மாலை நிலாவெளி பொதுசன நிலையத்தையடுத்துள்ள முற்றவெளியிற் பண்டிதர் ஐ. சரவணமுத்து அவர்கள் தலைமையில் ஸ்ரீ. பாண்டித்துரை அவர்கள் சொற்பொழிவாற்றினார். கிராமச் சங்கத் தலைவரும் பொதுசன நிலைய உபகாரியதரிசியும், பேச்சாளருக்கும் தலைவருக்கும் மலர் மாலைகள் சூட்டினர். ஸ்ரீ. பாண்டித்துரைஅவர்கள் தேச முன்னேற்றமும் கிராமமக்களின் தொண்டும் என்னும் விஷயத்தில், விவசாய விருத்தி, கைத்தொழில் முன்னேற்றம் மதுவிலக்கு அன்னிய ஆட்சியின் தீமை ஆதியாம் அம்சங்களை அடக்கியதாய் பண்டைக்காலத்திய ஔவை முதலிய புலவர்களின் கூற்றையும் தற்காலத்தியாக புருஷரான காந்திபோன்ற பெரியார்களின் கூற்றையும் மேற்கோளாக எடுத்துக்காட்டி இரத்தினச் சுருக்கமாகப் பேசினார். ஸ்ரீ. கோ. இராஜகோபால் அவர்கள் குறிப்புரை கூறியதோடு மதுவிலக்கு சம்பந்தமாய் மிக உணர்ச்சி ததும்பப் பேசி மதுவிலக்குத் தொண்டில் அனைவரையும் ஈடுபட்டுழைக்குமாறு வேண்டினர். விவசாய விருத்தி உத்தியோகஸ்தர் திரு. காராளசிங்கம் அவர்கள் விவசாய விருத்தி சம்பந்தமாகப் பேசினர். சபைத் தலைவர் அவர்கள் குறிப்புரையுடனும் ஸ்ரீ. எஸ். ஏ. தங்கராசா அவர்களின் நன்றியுரையுடனும் கூட்டம் நிறைவேறிற்று.

## உலக சுகாதார ஸ்தாபனம்

### இலங்கையர் நியமனம்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆசிய பிரதேசக்கிளைக்கு மூன்று இலங்கை டாக்குத்தர்மார் நியமனம் பெறுவார்கள் என அறியக்கிடக்கின்றது. ஒவ்வொரு அதிகாரிக்கும் பிரதி வருடமும் 10,000 டொலர்கள் சம்பளமாக உதவப்படும்.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 349 / P.T. இலக்க வழக்கில் 1948-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ம் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம். 1948-ம் ஆண்டு மார்கழி மாதம் 18-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி வரையில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

வல்லுவெட்டியால் காலஞ்சென்ற எம். சிவசுப்பிரமணியம் பெண் சிவக்கொழுந்தவின் ஆதனத்தின் தத்துவவகையில் வல்லுவெட்டி கார்த்திகேசர் கணபதிப்பிள்ளை.

தத்துவகாரன்

### ஆதனம்

வல்லுவெட்டிக் குறிச்சியிறை. நிருவத்தம்பை. நிலப்பரப்பு 6. குளி 9. எல்லை கிழக்கு தம்பிராசா கைம்பெண் அழகம்மாவுக்குடைய ஆதனம். வடக்கு, சுப்பிரமணியம் கைம்பெண் சின்னப்பிள்ளைக்குடைய ஆதனம். மேற்கு, தம்பு பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு கந்தையா வீரசிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும் இக்காணிக்கு மேற்குப் புறமாக நிருவத்தம்பை என்னும் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில்பங்கும்வழிவாய்க்காலுரித்தும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்
புலோலி கிழக்கு,
25-11-48 [3561]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருமக்களே!

வணக்கம். சிறுபராயத்திலே சில குழந்தைகள் மேதைகளாகக் காணப்படுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஐரோப்பா முதலிய தேசங்களிற் காணப்பட்ட சில குழந்தைகளைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள்.

யெஹூடி மெனுஹின் என்னும் ஒரு சிறுவன் 3 வயதிலேயே பிடில் வாசிக்கத் தொடங்கிவிட்டான். தற்சமயம் அவனுக்கு 32 வயது. உலகில் உள்ள பிடில்காரர்களுக்குள் தலை சிறந்தவனும் இவனே.

கிறிஸ்டியன் ஹீனெக்கென் என்ற சிறுவன் பிறந்து சில மணித்தியாலங்களுக்குட் பேசத் தொடங்கிவிட்டான். இவன் லூபெக் என்ற ஊரில் 1721-ம் ஆண்டு பிறந்தவன். ஒரு வயதில் வேதாகமத்தில் இருந்து சில வாக்கியங்கள் கூறினனும். 2 வயதில் பூமி சாஸ்திரத்தில் எந்தக் கேள்வியைக் கேட்டபோதிலும் பதில் கொடுத்தான். ஆனல் அவனது ஐந்தாவது வயதில் இறந்துவிட்டான்.

இவ்வகையானகுழந்தைகள் சிறுவயதிலேயே இறந்து விடுவார்கள் என்பது நம்பிக்கை. இறந்த பெரியார்களின் அவதாரமென்றே சிலர் கூறுவர்.

மக்குலே பிரபு 7 வயதிலேயே உலக சரித்திரம் எழுதிமுடித்தார். ஒரு வருடத்திற்குப் பின்பு மலையாள தேசத்திலேயுள்ளவர்களைக் கிறிஸ்து சமயத்திற் சேர முயற்சி செய்துவந்தார்.

ஜோன் ரஸ்கின் என்ற சிறந்த கவிஞர் 7 வயதிலே முதற் கவியை இயற்றினர்.

லான்டன் ரொனல்ட் பிரபு 'அப்பு' என்று சொல்லு முன்னரே 'பியானே' எனனும் சங்கீதக் கருவியைச் சுத்தமாக வாசித்தார்.

ஆனல் இதற்கு மாருகவும் சில காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. வின்ஸ்ரன் சேர்ச்சில் என்ற பெரியார் பள்ளிக்கூடத்திற் படிக்கும்போது மிக மட்டாகவே காணப்பட்டார். ஜோர்ஜ் பேனட் ஷோ என்ற நூலாசிரியருக்கு பள்ளிக்கூடக் காலம் சிறைவாசம் போலவே தோன்றிற்றும்.

இவர்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் மட்டமாக விருந்து பிற்காலத்திற் பெரியவர்களானவர்கள்.

கேசரிமாமா

# புகழேந்திப்புலவர்

**கா. சிவப்பிரகாசம் — மே.23**

ஓட்டக்கூத்தர் செருக்கடக்கிய புகழேந்தியார் என்ற புலவர் சிகாமணி சந்திரன் சுவர்க்கியைப் பாராட்டிப் பாடிய பாடல்களை அவரின் 'நளவெண்பா' என்ற நூலிலே காணலாம். 'சங்கநிதி போற்றரு சந்திரன் சுவர்க்கி' எனத் தொடங்கும் பாட்டில் புகழேந்திப்புலவர் சந்திரன் சுவர்க்கியை எவ்வாறு பாராட்டுகின்றார் என்பதை ஈங்கு எழுதுவாம்.

கானகத்தே, பாழ் மண்டபத்தே தன்னை விட்டுப்பிரிந்த கொழுநனைத் தேடி அலைந்து கொண்டிருந்த தமயந்தியை ஓர் மாசுணம் கழுத்தளவும் விழுங்கிற்று. சிரமே விழுங்குவதற்கு மிஞ்சியதையறிந்த தமயந்தி தன் நாயகனுன நளச் சக்கரவத்தியை கூவியழைத்தாள். நளன் இதற்கிடையில் நெடுந்தூரம் சென்றுவிட்டான். அவனுக்கு எப்படி இவள் ஓசைகேட்கும். பாவம்! அவள் நளன் தன் கூவுதலுக்கும் வாராமையால் தன் பிள்ளைகளை விளித்து, "நீங்களேனும் நளனைக் காண்பீர்களோ" வென்று கூறி அலறினள். கடைசியாக தமயந்தி தான் இறந்து போவதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டபடியால் தன் நாயகனுக்கு வணக்கஞ்செய்து அவனிடம் விடைபெற்றுக்கொள்ளக் கருதிக் கைகூப்பினள். இவளின் பரிதாப நிலை இவ்வாருக, தமயந்தியின் அழுகுரலைக் கேட்ட வேடனெருவன் அவண் நண்ணினன். ஆங்கு தமயந்தியின் பரிதாப நிலையைக் கண்ணுற்றனன். அக்காட்டிலே வதிவானும் வெண்மையான தோடுகளை அணிந்தவனும், செம்பங்கியுடையானும், மூங்கிலினற் செய்யப்பட்ட சிலையையுடையானுமாகிய அவ்வேடன் ஓர் பகழியைத் தொடுத்து, கழுநுவாழ் கானகத்துக்காராவின் வாயின் முழுகுவாளை வெளிப்படுத்தினன். காம்பின் வாய் வில்வேடன் தமயந்தியை அவ்வாவின் வாயினின்றும் விடுவித்ததைப் புலவர் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:—

சங்க வடிவமாகிய குபேர நிதியைப்போலக் கொடுக்கின்ற சந்திரன் சுவர்க்கி என்பவன் உலகத்தை கொடிய கேட்டினின்றும் மீட்டதைப்போல் மாற்றலரைச் சினந்து தன் புறத்தி நீக்கிய மூங்கிலினலே செய்யப்பட்ட வில்லையுடைய வேடன் தமயந்தியைக் கொடிய பாம்பின் வாயினிடத்திலிருந்து வெளிப்படுத்தினன்.

இங்ஙனம் புலவர் பெருமான் புகழ்ந்தது அவரின் செய்ந் நன்றி மறவாச் சிந்தையைப் புலப்படுத்தும்.

## கீரிமலை நீரூற்று

**க. பரமேஸ்வரன் — கீ.235.**

திசை உக்ர சிங்கன்
திருமகள் பெற்ற
வசைமுகம் மாறிய
வாற்றன்—இசையுற்ற
மாவிட்ட வானன
மாபுரமே கீரி
போய்விட்ட
ஊரென்று போற்று.

யாழ்ப்பாணத்தின் வடபகுதியிற் கடற்கரை ஓரத்திற் கற்பார் செறிந்த மேட்டு நிலமுண்டு. முன்னெரு காலத்தில் இம் மேட்டின் சாரலில் ஒரு முனிவர் இருந்து தவஞ் செய்தார். அவர் கீரி முகத்தை உடையவர். அவரை நகுல முனி எனவும், கீரிமுக முனியெனவும் அழைத்தார்கள். அம் மேட்டின் சாரலில் ஓடிய அருவி யொன்றில் நகுல முனிவர் ஒரு முறை ஸ்நானம் செய்தார். உடனே அவருடைய கீரி முகம் மனிதமுகமாயிற்று. அதன்பின் அம் மேட்டிற்குக் கீரிமலை என்னும் பெயர் வழங்கிற்று. அக் காலத்திற் சோழமண்டலத்தைத் திசை உக்கிரசிங்கன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு மாருதப்புரவீகவல்லி என்னும் ஒரு பெண் மகவுண்டு. அப் பெண் பிறக்கும்போதே குதிரை முகத்தோடு பிறந்தாள். அவள் கீரிமலையின் தீர்த்த விசேடத்தைக் கேள்வியுற்றுக் கீரிமலைக்குத் தன் பரிவாரங்களோடு சென்றுள். நகுல முனிவர் ஆடிய அருவியிலே தானும் ஆடினள். குதிரைமுகம் உடனே நீங்கிற்று. கீரிமலைக்கும் அதைச் சூழ்ந்த பிரதேசத்திற்கும் மாவிட்டபுரம் (குதிரைமுகம் நீங்கிய இடம்) என்று பெயரிட்டாள். மாவிட்டபுரத்திலே நெடுநாட்களாகத் தங்கியிருந்தாள். அங்கே கந்தசாமி கோவிலொன்றைக் கட்டுவித்தாள். அக்கோவில் இன்னும் சிறப்போடு விளங்குகிறது. அக்கோவிலின் தீர்த்தோற்சவம் இன்றும் கீரிமலைக் கடலிலேயே நடைபெறுகின்றது. பிரசித்திபெற்ற அவ்வருவி எங்கிருக்கிறது என்பதை இப்போது காணமுடியவில்லை. மலைப் பிரதேசம் கடலலையால் அரிக்கப்பட்டமையால் அருவியின் ஊற்றுக்கண் கடலினடியில் மறைந்திருத்தல் கூடும். கடல் பெருக்கற்றிருக்கும் காலங்களில் பல அருவிகள் கடலினருகில் சுரத்தலை இன்றுங் காணலாம். நீங்கள் ... பண்ணியபின் அத்... எப்போதாவது பார்ப்பீர்கள்.

### பிறந்த தின வாழ்த்துக்கள்

28 11-48—4-12-48

மே. 46. த. திருநாவுக்கரசன்; கீ. 205- ஸ்ரீகாந்தா மாலினி தேவி; கீ. 27. ஷாந்தி க்ராளசிங்கம்; மே. 100. கங்காதேவி முத்துத்தம்பி; மே. 206. ச. லோ. ஜேம்ஸ்; மே. 223. கி. திரவியசிங்கம்.

❋

மேற்குறித்த எனது மருமக்கள் இன்று போல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக:

# மது விலக்கு

**சி. குணரத்தினம் — மே.208**

மது மனிதனை விழுத்தும் மரணப்பொறி; மிகப் பொல்லாத பசாசு. தொட்டாலும் விடாது பிடித்துக்கொள்ளும் மதுவில் மதுசாரம் என்னும் கொடிய நஞ்சுண்டு. அதைச் சிறிதளவு குடிக்கினும் அடுத்தடுத்துக் குடிக்கவேண்டும் என்னும் ஆசையை உண்டாக்கும். அதை உட்கொண்ட அரை விநாடிக்குள்ளே மூளையைத்தாக்கும்; விறுவிறுப்பையும் ஆத்திரத்தையும் கொடுக்கும். மனிதன் சரியாக நினைக்கமுடியாமையால் பல சேட்டைகளைச் செய்கிறான்; கடைவாசல், தெருக்கரை, கல், முள், என்றும்பாராமல் இடறி விழுகிறான்; சரியாகப் பேச முடியாது உளற ஆரம்பிக்கிறான்; அந்தரங்கமான விஷயங்களை எல்லாம் அம்பலப் படுத்துகிறான்; மதுவை விட்டு விடவேண்டும் என உறுதி கொண்டபோதிலும், அந்த நஞ்சு — குடிப்பவனுடைய மன உறுதியைக் கெடுப்பதால் அதைவிட்டுவிட முடியாது திண்டாடுகிறான். மது மனிதனுக்குள்ளே சென்று அறிவை வெளியே போகப்பண்ணுகிறது.

உலகில் மிக மிகக்கொடியது மது. அது சன்மார்க்கத்துக்கு விரோதி; மனிதனை மிருகமாக்குகிறது. குடித்தவன் பகுத்தறிவற்ற பசாசாகத்திரிகிறான். குடித்துவிட்டுப் பிணமாகக் கிடக்கிறான். பொருளைக் கொடுத்து மதுவைக் குடித்து, மெய்மறதியைக் கைமாருகக் கொள்வது எவ்வளவு அறியாமை? மானம் மரியாதைகளைக் கெடுத்து மனிதனை மது பலவீனன் ஆக்குகிறது. நரம்புத் தளர்ச்சி, கைகால் நடுக்கம், அசீரணம்...... ஏற்பட்டு, சுகாதார நிலை கெட்டு மனிதன் நோய்வாய்ப் படுகிறான். தொற்று நோய்கள் பல அவனை இலகுவிலே பற்றுகின்றன. மருந்து கூட அவன் தேகத்திற் குணப்படாது. குடிகாரன் தன் கூலியை இழப்பதோடு ஏனைய தேட்டங்களையும் அழித்து நீதிஸ்தலத்திலே திண்டாடுகிறான். பெண்சாதியின் தாலியிலும் கைவைக்கிறான். மது மனைவி மக்கள் மீதுள்ள அன்பை மறப்பிக்கிறது. மனைவி மக்கள் அடியாலும் பிணியாலும் பசியாலும் வருந்துகிறார்கள். குடும்பத்திற் சந்தோஷம் இல்லை. இராப்பகலாகச் சண்டையும் கூக்குரலுமாயே இருக்கிறது. குடிகாரன் தான் கெட்டதோடு நில்லாது தன் மனைவி மக்களுக்கும் குடிக்கப் பழக்கித் தன் பிற் சந்ததிக்குமே கெடுதி செய்கிறான். குடியால் எத்தனையோ குடும்பங்கள் நாசமாகிவிட்டன. குடிகாரன் தன் தாய்க்கும் தன் மனைவிக்கும் தன் மக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்கின்றுனில்லை. தாய் என்றும் சேய் என்றும் பாராது சிலவேளையில் கொலை கூடச் செய்கிறான். மதுபானம் இன்னும் நம்மிடையே இருந்தால், தமிழர் என்ற சாதியே தொலைந்துவிடும். எத்தனையோ பெரிய மரியாதையான குடும்பங்களிலே கூட, மருந்து, தேகபலம், சிரமபரிகாரம் என்ற போர்வைக்குள் மது மறைந்திருக்கிறது.

அவர்களை மிருகத்தன்மையிலிருந்து, தெய்வத் தன்மைக்குக் கொண்டுவரவேண்டும். அன்பால் எதையும் வெல்லலாம். பெண்களும் மாணவர்களும் அன்புகலந்த சேவையால் குடிகாரரைக் கவரலாம். மதுவால் வரும் கேடுகளைக் குடியர்களுக்கு எடுத்து உரைக்கவேண்டும்; ஒவ்வொருவரும் மனதில் இருந்து மதுவை விலக்கவேண்டும்; நாம் ஒவ்வொருவரும் நீக்குவதால் நமது தேசத்திலிருந்தே மது விலகி விடும். மது விலக்குக் கோஷம் நாடெங்கும் கேட்க வேண்டும். உள்நாட்டு மதுவை ஒழிப்பதோடு வெளிநாட்டில் இருந்துவரும் மதுவையுந் தடுக்கவேண்டும். மது இறக்கிய தொழிலாளரை வேறு வேலைகளில் அமர்த்தி, அவர்களைக் காப்பாற்றவேண்டும். மதுவால் அழியும் குடும்பங்களைக் காப்பாற்றுவது அரசினரின் கடமை. எல்லா மதங்களுமே மதுவை விலக்குமாறு கூக்குரலிடுகின்றன இப் புனிதமான திருத்தொண்டைச் செய்யுமாறு மகாத்மா மிகவும் வற்புறுத்தினர். மதுவிலக்கால், நாசமாகும் குடும்பங்கள் தலைநிமிரும்; எங்கள் பணம் எங்கள் வீட்டிலும், எங்கள் நாட்டிலும் தங்கும்; பாதகங்களும் வறுமையும் நீங்கும்; பெண்களுக்குப் பரிபூரண விடுதலை கிடைக்கும்; இல்லறம் செழிக்கும்; தொழில் விருத்தியாகும்: ஏழைகள் வீட்டில் காசு மிஞ்சும்; கடன் தீரும்; ஊர் செழிக்கும்; எங்கும் மங்களம் பொங்கும்.

## மாமா பதில்

**சி. குணரத்தினம்,** மே.208: உமது வியாசம் மிகவும் நன்றாயிருக்கிறது. இம்முறை பிரசுரமாகிறது மருமகனே.

**அ. சுப்பிரமணியம்,**மே. 20: உமது கட்டுரை கிடைத்தது. எல்லோரும் கல்வியைப் பற்றித்தானே எழுதுகிறார்கள். வேறு விஷயங்களைப்பற்றி எழுதும் வல்லமை யில்லையோ?

**அ. டே. குலராசா,** மே. 38: உமது இரு கட்டுரைகள் கிடைத்தன.

**அ. குமாரசுவாமி,**மே.244: உம்மை என் மருமகனுக்கியிருக்கிறேன்.

**தி. பஞ்சாட்சரம், மே. 95:** மருமகனே! திடீரெனப் பெயர் மாறியதையிட்டு மிகவும் ஆச்சரியப்படுகிறேன். கடிதம் எழுதும்போது உமது இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

**ச. லோ. ஜேம்ஸ், மே.216:** உமது கட்டுரை கிடைத்தது.

**க. சி. திருச்சிற்றம்பலம்,** மே. 220: மருமகனே நான் எவ்வகையில் உங்கிருக்கும் தமிழரைத் தமிழ் சுத்தமாகப் பேசவைக்க முடியும்? கட்டுரை பிரசுரத்திற் கேற்றதாயில்லை. உமது தந்தையின் பெயர் கிடைத்தது.

### மருமக்கள்

மே. 244: அம்பலவாணர் குமாரசுவாமி, மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிழல்

என்னுள்ளே ஒரு துடி துடிப்பு—அதிர்ச்சி பார்த்தது. ஒரு வாக்கியம் கொடுத்த வெகுமதி அது ஏனே அது தோன்ற வேண்டும்!

அந்தத் துடிதுடிப்பு மூளையைக் கவ்விக்கொண்டு உலுப்பியது; மூளை வலித்தது. தன் அதிர்ச்சியைப் பங்கிட்டனுபவிக்க ஒரு துணையை வேண்டியது; அதன் துணைக்கு வந்தது மனம். மனமும் மூளையும் பிராணஸ்நேகிதர்கள். எந்த இயக்கத்திலும் அவர்கள் சேர்க்கைத் தொழிற்பாடுகள் பிரதிபலிக்கும்; பிரிவென்பதையே அறியாதவர்கள்.

மனதுக்குத் தெரியும் தன் நண்பன் ஏன் இவ்வளவு பரபரப்படைந்தானென்று. மனம் தன்னையே பார்த்தது; காலமும் மனிதனும் சேர்ந்து நடத்திய வாழ்க்கைச் சம்பவங்களின் சாயாவுருவங்களை நோக்கியது. அடுத்த கணம் அது உற்சாகத்துடன் ஓலமிட்டது, 'அந்த நாட்கள், அந்த நாட்கள்' என்று.

'எந்த நாட்கள்; நீ எந்த நாட்களைப்பற்றிச் சொல்லுகிறாய்' என்றது இன்னொரு குரல். திடீரென்று இன்னொரு புதுப்பேர் வழியும் கலந்துகொண்டாரோ? 'தெரியவில்லையே......ம்......ம்' என்று ஞாபகத்தில் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டது நினைவு.

'மறதி உன்னை மறைக்கிறது; இதோ பார்' என்றது மனம். நினைவு பார்த்தது; புகைப்படத தட்டு போன்ற மன ஏட்டில் பதிந்த காலப் பிசாசால் கீறல் கண்ட சில சம்பவங்களில் சாயாவுருவங்களை வைத்த கண் வாங்காமல் நோக்கியது. 'இதோ ஒரு சாயை' என்றது மனம். நினைவு உற்றுப் பார்த்தது; தாமதிக்கவில்லை. படர்ந்து சென்றது.

* * *

ஆம்; அந்த நாட்கள்; என் பால்ய பருவத்தில் இன்ப மணம் கமழ்ந்த நாட்கள்; அவை நினைவில் மங்கியிருக்கலாம்; ஆனால் மறக்கமுடியாதே.

சில்லு ஒரு அச்சிலே மாட்டப்பட்டு அதைச் சுற்றித்தான் சுழல்கிறது. அதைப் போன்றதுதான் என் மனமும். என் பால்ய நினைப்புகளெல்லாம், அந்த வேப்ப மரத்தைச் சுற்றிச் சுற்றியே சுழல்கின்றன. இவ்வளவிற்கும் அது ஒரு சாதாரண வேப்பமரந்தான். கப்பும் கவருமாக வானளாவி நின்ற கிழடு அது. பருவத்துக்குத் தக்கதாக மலர்ச்சிபெற்றுக் குளிர்மையூட்டிக்கொண்டே வந்தது; இளம் பெண்களின் பூரிப்பைப் போல. சின்னஞ்சிறு சிட்டுப்போல கட்டுப்பாடற்ற பால்ய நாட்களின் பெரும்பகுதி அதன் நிழல் மடியிலேதான் கழிந்தது. அந்தப் பெருமை எனக்குமட்டுமல்ல; என் நண்பன் நடராஜனுக்குந்தான். எங்களிருவருக்கும் அந்தரங்கமான பால்ய சிநேகிதத்தையுண்டாக்கி வைத்தது ஒரு ஜடவஸ்து; வெறும் விளையாட்டுப் பொருள்; ஒரு கயிற்று ஊஞ்சல். அந்த வேப்ப மரத்தின் வடக்குப் பார்த்த கொப்பில் கட்டப்பட்டிருந்தது அது. நாங்களிருவரும் ஊஞ்சலடிக்குச் சென்றுவிட்டால் எங்களைப் பிரிப்பதற்கு எந்தச் சக்தியாலும் முடியாது; ஆனந்தமாக ஆடி மகிழ்வோம்,

நீளம் பாய்தலில் ஒரு அங்குலம் கூடப் பாய்ந்தவன் வெற்றியடைகிறான்; மற்றவன் தோல்வியடைந்தவனும். இதைப் போன்றவன்தான் என் நண்பன். அவனுக்கு என்னிலும் ஒரு வயது கூட—எட்டு வயது. எப்போது பார்த்தாலும் 'வயதில் கூடியவர்கள் தான் முதலில் ஊஞ்சல் ஆட வேணும்' என்று சொல்லிக்கொண்டு வருவான். 'வயதாம் வயது; வன் நான் ஆடினல் ஊஞ்சல் அறுந்துவிடுமோ' என்று நினைப்பேன்; ஆனல் சொல்ல மாட்டேன். சொன்னல் எங்காவது ஓடிவிடுவானே என்ற பயம். பேசாமல் ஒரு காலை மடக்கி வேப்பமரத்துக்கு முட்டுக்கொடுத்து, அதிலே சாய்ந்து, எங்காவது பார்த்துக்கொண்டு நிற்பேன். அவன் என்ன செய்கிறான் என்பதைக் கடைக்கண் பார்த்துச் சொல்லும். கொஞ்ச நேரம் அவன் ஏறியிருந்து ஆடுவான்; ஆனல் அது சுவைக்காது. 'சட்'டென்று இறங்கி 'ஐயோ, இதென்ன மட்டை வெடித்துப் போய்விட்டதே; என்னென்று ஆடுவது' என்று குழறுவான். நான் ஓடிப்போய்ப் பார்ப்பேன்; எப்படியிருந்தாலும் என துடைமையல்லவா? மட்டை அப்படியே இருக்கும்; அவன் சிரிப்பான்; நானும் சிரிப்பேன். 'சரி இனி ஆட்டேன்' என்பான்; நான் ஆட்டத் தொடங்குவேன். வேறு என்னதான் செய்ய முடியும்?

ஒரே ரீதியான வேலையைச் செய்துகொண்டிருக்கக் குழந்தைகளால் முடியாது; கெதியில் சலிப்பு ஏற்பட்டுவிடும். நானும் சலிப்புமனதை யமுக்க 'நான் ஆடினல்' என்ற அங்கலாய்ப்பு முன்னே தள்ளத் தத்தளித்துச் சிணுங்குவேன், 'இனி இறங்கேன்' என்று.

"ம்...... ம் ..... என்ன" என்பான், கேள்விக்குப் பதில் வரவேண்டிய நேரந்தவறி, தன்னல் சிருஷ்டிக்கப்பட்ட ஆனந்த உலகில் சஞ்சரித்து, தவறி விழுந்த ஏக்கம் அதில் தொனித்தது.

"நான் ஆடவேண்டும்" என்று என் உள்ளத்தைத் திறந்தேன்.

"இன்னும் ஒரு ஐந்துதரம்; ஐந்தே ஐந்துதரம்" என்றான் தீர்க்கமாக. ஆசையும் ஆனந்தமும் பிணைந்த இருதயம் அவ் வார்த்தைகளில் எதிரொலித்தது.

ஆனல்......

நான் ஆற்றில்மூழ்கி உயிருக்கு மன்றாடிக் கரையேறுஞ் சமையம் ஒரு கடுஞ் சுழிப்பு மீண்டும் என்னை நட்டாற்றில் கொண்டு விட்டது; தத்தளித்தேன்.

"ஐந்துதரந்தானே; ஐந்தே ஐந்துதரம் – சரி" என்றேன்.

ஒருவரின் நெகிழ்ச்சிவாய்ந்த வேதனைகள், இன்னொருவரின் மென்மையான இன்பமாகப் பரிணமிக்கிறது, ஒருவரின் இரத்தம் இன்னொருவனின் பணமாகத் திரள்வதுபோலே, நடராஜனின் புன்சிரிப்பு ஆனந்தத்தைக் காட்டியது.

"ஒன்று"

"இரண்டு"

"மூன்று"— கருகிவிட்டது போலிருந்த என் இன்பச்செடி புதுத்தளிர்விட ஆரம்பித்தது. இன்னும் இரண்டுதரம் — இந்த இரண்டெட்டில் ஆற்றைக்கடந்துவிடுவேன். அப்புறம் ஆனந்தம்; என் மனோராச்சியம்.

"நாலு"

"ஐந்து" ஆட்டம் முடிந்துவிட்டது, என் இன்பச்செடி பூத்துக் குலுங்கி நின்றது; ஆற்றைக் கடந்துவிட்டேன். மகிழ்ச்சி அளளிக்குளித்தது; மனதால் கட்டுப்படுத்த முடியவில்லை; வாய் வழியாகக் கிளம்பியது.

"இறங்கு; இனி நான்" என்றேன். அதில் கடுமை தொனித்திருக்கவேண்டும். சில சமயம் பிடிவாதகுணமும் இன்பத்தின் விளைநிலமாய்விடுகிறதோ? அவன் ஊஞ்சலைவிட்டு இறங்கவேயில்லை.

"முடியாது; இன்னுமொரு தரம்" என்றான் பிடிவாதத்துடன். அவன் வைராக்கியக் கோட்டையைத் தகர்க்க என்னிடம் பலமில்லை; என்றாலும்...

"இதென்ன நீ எப்போதும் இப்படித்தான்; நான்தானே நீ சொன்னபடி நடக்தேன். நீ... ... நான்... .." என்று சிணுங்கினேன்.

"இல்லை மணி; இன்னும் ஒரேயொருதரம்தான், பாரேன். நல்லபிள்ளையோ இல்லையோ—ஒரு நிமிஷம்" என்றான். முன்பிருந்த பிடிவாதகுணம் வெளியே மறைய அந்த இடத்தில் கெஞ்சுதல் அல்லவா மிஞ்சிவிட்டது.

ஒரு நிமிஷந்தான் — அதை என்மனம் எந்த அளவுகொண்டு அளக்கிறதோ? அது அவனுக்கு எப்படித் தெரியும்!

"சரி, ஒன்று" — என்று ஊஞ்சலைத் தள்ளிவிட்டேன். கைகள், மனம் — ஏன் உடம்பே ஒரு தூக்கமுடியாத பாரமாய்ப் போக, ஒரு பெரிய வேலையைச் செய்து முடித்தவன்போல் நின்றேன்.

அவன் இறங்கிவிட்டான்!

'அப்படி இன்னும் 'ஒன்று, ஒன்று' என்று ஒன்பதுதரம் ஆடிவிடுவானே' என்று பயந்தேன். சந்தேகம் பறந்தது. இனி நான் ஆடுவேன்; அவன் ஆட்டுவான். முறையும் அப்படித்தானே!

## (2)

அன்று.........

மனஏடு புரண்டு வேறொரு சாயாவுருவைக் காட்டியது; நினைவு பலித்தது; படர்ந்தது.

— சு. வே. —

அன்று அவன் வரவில்லை; எங்கோ தந்தையுடன் சென்றுவிட்டான். தாம்பத்திய வாழ்க்கையில் புருஷனும் மனைவியும் உயிர்ச்சிநேகிதர்கள்மாதிரி. அவர்களிருவராலுந்தான் அதில் புதுமையழகையும், இன்பத்தையும் காணமுடியும். ஆனல் ஒருவர் தனித்துவிட்டாலோ அவ்வாழ்வு பாழாய்ச் சுவையற்றதாய் விடுகிறது; மனம் நிலையின்றித் தத்தளிக்கிறது. இதற்குப் போட்டி போட்டு என்மனமும் அலைந்தது. ஊஞ்ச லாட்டத்திற்கும் இரண்டுபேர் இன்றி ரசனை ஏற்படாதென்று அறிந்த என்மனம் தத்தளியாமல் தேறு என்னதான் செய்யும்?

மனம் ஆசைகளைக் குமிழியாகக் கிளப்பிக்கொண்டேயிருக்கும்; அவைகளை நிறைவேற்றி வைக்க ஐம்பொறிகளும் பிரயத்தனப்படும். என்மனம் தாகங்கொண்டு அலைந்தது ஒருதுணைக்காக. கண்களோ நாலுபக்கமும் சுழன்றன மனதின் ஆசையை நிறைவேற்ற. இந்த முயற்சியில் கண்கள் பிரதிபலனைத்தான் கண்டன; எந்த ஒரு மனித மூளையும் அந்தத் திக்குகளிலே தென்படவில்லை. பிரதிபலனைக் கண்ட மனதின் தத்தளிப்பு வேகங்கொண்டது. தனியாக ஊஞ்சலில் போயிருந்து ஆடினேன், அமைதி நிலவி சந்தோஷம் உண்டானுல் என்ற அங்கலாய்ப்பில். ஆனல் அந்தத் தனியாட்டம் வெறும் பாலைவனம் போல் வரண்டு கிடந்தது. இப்பொழுது மனதில் தோன்றிய தத்தளிப்புடன் விரக்தியும்கலந்துவிட்டது. இனி......முடிபு?

வீட்டுக்குப் போகவேண்டியதுதான்; திரும்பினேன். ஆசை குத்தத் தொடங்கியது; போக அனுமதி தரவில்லை; நின்றேன். விரக்தியும், தத்தளிப்பும் 'போ போ' என்று தள்ளின.

பொருள் விற்பனையிலே கொள்வோனுக்கும் கொடுப்போனுக்கும் தகராறு ஏற்பட்டுவிட்டால் ஒரு தரகன் வந்துதான் அதைத் தீர்க்கவேண்டும். என் மன எழுச்சிகளின் கலகங்களைச் சமப்படுத்த வந்தது ஒருதரகன்—நினைவு. உடனே நான் துள்ளிக்கொண்டு எங்கள் வீட்டு வேலியோரமாகஓடினேன். சீ! இதற்கும் சந்தேகங்களையும் தடைகளையும் கிளப்பிக்கொண்டு ஏதேதோ முணுமுணுத்தது, மனதின் பெலஹீனம். இது எப்போதும் கொள்முடியும் நாரதனைப்போன்றது. 'பரவாயில்லை, உன்சொல்லைக் கேட்டால் ஒன் [illegible] [illegible] என்று மனதிலும் 'சொல்லவேண்டியதைச் சொன்னேன்' என்று அழுங்கிவிட்டது பெலஹீனம். அடுத்தகணம்......

கைவிரல்கள் வேலிக்கிடுகின துவாரத்தைச் சற்றுப் பெரிதாக்கிவிட்டது; நான் குனிந்து, ஒரு கண்ணைத் துவாரத்தின் வழியாகச் செலுத்தி அடுத்த 'வளவை' ஆராய்ந்தேன்; மனம் மலர்ந்தது. பாலைவனமாய் விட்ட தனிமை விளையாட்டில் ஒரு சிறு சுனை தோன்றிப்பாய ஆரம்பித்தது. ஆம்; அது சுனைதான், இப்போதைய நிலையில். இனி அந்தச் சுனையை யனுபவிக்கவேண்டியது தானே.

அந்தச் சுனை......

சாதாரண கவனிப்பிருந்தாலே, அந்தத் தலைமயிர், அழகு நெளிந்து மயக்க மூட்டும் கேசமாகிவிடும். ஆனல் இன்று அந்தச் சுருண்ட மயிர் எண்ணெய்ச் சிக்குப்பிடித்துச் சீப்பின் வைரியாகி யிருந்தது. ஒழுங்கான பழக்கமில்லை யென்பதை மூக்கிலே வழிந்து காய்ந்துபோய்ச் சகதிகண்ட சளியும், கண்ணிலே வழிந்திருந்த 'பீளை' யும் எடுத்துக் காட்டின. விளையாட்டிலே கிடைத்த பரிசான புழுதி உடம்பைத் திரையிட்டிருந்தது. 'அக்குள்' பாகத்திலும் கழுத்திலும் உறைந்துபோய்க் கரி யுருவுடன் தோன்றிய அழுக்கு, குளித்து எத்தனை நாட்களாகின வென்பதைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தது. அரையில் ஒரு துண்டு ........இல்லை — அது அழுக்குகள் இவைதாம் என்பதை எடுத்துக்காட்டும் கண்ணுடியாகவிருந்தது. என்றாலும் நிறமும், முகவெட்டும், அழன்று வீசும் கண்களும் நிரந்தரமான வுருவம் அழகுடையதுதான் என்று சொல்லின. சிலசமயம் ஓவியர்களின் கவர்ச்சியற்ற பின்னணியிலேயும், அவர்களின் உருவங்கள் உயிருடன் பேசுகின்றனவல்லவா?

நான் "வள்ளி" என்று கூப்பிட்டேன்; அவள் சத்தம் வந்த திக்கை நோக்கினுள், அலட்சியமாக. அவள் கண்கள் "என்ன" என்றனவோ?

"இங்கே வா" என்றேன்.

"ஏன்"

"வா ஒரு விசயம் சொல்றேன்"

அவள் வந்தாள், குழந்தைகளுக்கு இறைவன் கொடுத்த நன்கொடையான புன்சிரிப்புடன்.

"வா, ஊஞ்சலாடுவோம்"

"ஊஞ்சலாடவா? ஓ! இதோ! ......" என்று சொல்லி வேலியிலுள்ள "பொள்ளல்" வழியாக நுழையப்போனுள்; அவளால் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. கனவிலும் காணமுடியாத ஒன்று தனக்கு இவ்வளவு இலகுவில் கிடைத்துவிட்டதாக எண்ணினுளோ என்னவோ? வேலிப் 'பொள்ளல்' வழியாகத் தலையை நுழைத்தாள்; எதையோ நினைத்துக்கொண்டு தலையை இழுத்துவிட்டாள். ஏனே?

"நான்மாட்டேன்" என்றாள். ஒரு பயங்கர நினைவு அவள் பிஞ்சு மனதில் முளைத்துவிட்டது.

"ஏன் வள்ளி"

"நான்வந்தால் உங்கள் ஐயா அடிப்பார்"

"யாருக்கு"

"இரண்டுபேருக்குந்தான்"

"ஏன்"

"எனக்குத் தெரியாது, அடிப்பார்'

"அப்பா வீட்டில் இல்லையே"

"ம்... உஹூம்... நான்மாட்டேன்... அம்மா அடிப்பாள்"

"அம்மாவும் இல்லை, எங்கோ போய்விட்டாள்"

"பொய் சொல்றாய், நான் போறேன்"

"வள்ளி ... வள்ளி ... நீவா ... நாங்கள் ஒருவருக்குந் தெரியாமல் ஆடுவோம் ... வா"

"ம் ... ம் ... முடியாது"

"வாஎன்றால் வரமாட்டாயா?" என்று கெஞ்சினேன்.

வள்ளி வழிக்குவந்துவிட்டாள். நாங்கள் இருவரும் கைகோர்த்துக்கொண்டு சென்றோம், எங்கள் இன்பவுலகுக்கு.

எப்போதையிலும் பார்க்க அன்று ஊஞ்சலாட்டம் மிகுந்த சுவையளித்தது. முன்பு என் நண்பனின் பிடிவாதத்தினிடையே, எப்போது இறங்கச் சொல்கிறானே என்ற ஏக்கச் சூழலிலே ஆடிய நான், இன்று தனிக்காட்டு ராஜாபோலே ஊஞ்சலிலேயிருந்தேன்; அவள் ஆட்டினுள். ஆட்டம் கூடக் கூட

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

ஒரு சமூகத்துடன் பழகச் சந்தர்ப்பம் கிடைப்பதினுலேயே அதனிடம் ஓர் ஈடுபாடு உண்டாகிவிடுகின்றது......, வெளிப்பகட்டிலும் பார்க்க உள்ளழகுதான் பிரதானமாகத் தோன்றியது. மாசிலா மணிக்கு, ஆனபடியாற்ருன் அவர் தனது நண்பனுக்குப் பின்வருமாறு எழுதினுர்: "எந்தத் தீண்டாதாளின் உள்ளழகில் என் மனதைப் பறிகொடுத்தேனே, அந்தப் பெண்வணயே நான் விவாகம் செய்யத் தீர்மானித்துவிட்டேன்..........."

* * *

இந்தத் தத்துவத்தினின்றும் பிறந்த சிந்தனைச் சிதர்களைப் பின்னி, வைதீகத் திரையைப் பொள்ளலாக்கி, மனிதனின் உயர்வைக் காட்டுகின்ருர். சு. வே. —ப. ர்.


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ருபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ருபாவுக்குக் கூடியும் 10,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ருபாவுக்குக் கூடியும் 50,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ருபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3544]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஜய குமாரன்

இலங்கையர்கோன்

### நாடக பாத்திரங்கள்

சிங்கபாகு — சிங்கபுரியின் அரசன்
அரசி
விஜயன்—சிங்கபாகுவின் மகன்; பட்டத்து இளவரசன்
அபயவாஸன், பாண்டுதேவன், கருணுமித்தன் } விஜயனுடைய நண்பர்கள்
வாஸன் — விதூஷகன்
சுமித்தன் — விஜயனுடைய தம்பி
ரஞ்சிதா — ஒரு கணிகை
குவனு — இயக்க அரசி
ஒரு யக்க தலைவன்
பாண்டியன் மகள்
போர்வீரர்கள், பணிப்பெண்கள், விவசாயிகள், யக்கர்கள் முதலியோர்.

நாடக களம்: கூர்ஜரத்தில் உள்ள சிங்கபுரியும் இலங்கையும்.

காலம்: கி. மு 5-ம் நூற்ருண்டு.

### காட்சி 18

இடம்: அரண்மனை நந்தவனம்.
காலம்: பின் மாலை.

[விஜயன் தலையைக் கைகளில் தாங்கிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கிருன். சிறிது தூரத்தில் அவனுடைய இரு குழந்தைகளும் மணல் வீடு கட்டி விளையாடிக்கொண்டிருக்கின்றனர்]

விஜய: ம்ம்... கடமை கடமை என்று கடைசியில் எதைக் கண்டு விட்டேன். மனம் போனபடி வாழ்ந்து ஆத்ம திருப்தியைத் தேடிக் கொள்ளுவது கடமையா? அல்லது எல்லா ஆசைகளுக்கும் தடை விதித்து இலட்சியத்தைத் தேடித் திரிவது கடமையா? கடைசியில் இலட்சியமே கிட்டாமற் போய் விட்டால்! அரசன் என்ற பொறுப்பை ஏற்றுவிட்டதற்காகச் சாதாரண மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை நான் இழந்துவிட வேண்டுமா......? சாந்தி! சாந்தி!! அது இப்பிறப்பில் எங்கே எனக்குக்கிட்டப்போகிறது... ஒரு ஆசை பூர்த்தியானவுடன் இன்னொரு ஆசை. அதுவும் பூர்த்தியானவுடன்—கடமை—இலட்சியம்...

[குவனு வருகிருள்]

வா, இப்படி. என்ன இன்று கண்ணைப் பறிக்கும்வண்ணம் சர்வாலங்கார பூஷணதையாய்... வஸந்தத்தின் இனிமை உன்னையும் தாக்கிவிட்டதோ? ஆ! உன் கூந்தல் மலர்களின் வாசனை உயிரைக் கொள்ளை கொள்கிறது. உன் கண்கள் கூடக் கயல் மீன்கள்போற் புரள்கின்றனவே. என் அஞ்சுகமே அருகில் வா.

குவனு: நாதா! [அருகிற் போனவள் விஜயனுடைய முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு ஒரு அடி பின்வாங்கி] சுவாமி, உங்கள் வார்த்தைகளிலே தொனிக்கும் உற்சாகம் உங்கள் முகத்திற் காணப்படவில்லையே. அது பிரேத முகம்போல் வெளிறிப்போய் இருக்கிறதே... அன்பே உருவாய் அமைந்த என் ஆருயிர்ச் செல்வ, தங்கள் துயரம் நான் அறியக் கூடாததா?

விஜய: துயரம்? எனக்கா? நீ கனவு காணுகிருய் குவனு. துயருறுவதற்கு எனக்கு என்ன காரணம் இருக்கிறது. அழகிய இத்தீவின் தனிமுதல்வன் நான் அல்லவா? நாளுக்கு நாள் புதிதாக மையல் விளைக்கும் இன்ப மோகினியாகிய நீ என் மனைவி அல்லவா? உன் காதல் காலம் இடம் முதலிய சூழுகிய எல்லைகளைக் கடந்ததல்லவா? அதோ விளையாடும் பாலர்கள்....

குவனு: போதும்—போதும், பசப்பாதீர்கள். நான் உங்கள் சுபாவத்தை அறியாதவள் அல்லவே. தாங்கள் கவலையற்று, கவலையுற்றுஇருப்பதும் எனக்குத் தெரியாமலா போய் விடும்... தங்கள் இன்பத்தில் உள்ளதைப்போல் தங்கள் துன்பத்திலும் நான் சமபங்கு பெற உரிமை உள்ளவள் அன்ருே... அல்லது நான் அதற்குத் தகுதியற்றவளாகப் போய்விட்டேனே........ [அழுகிருள்.]

விஜய: ஆமாம்—உன் கண்ணீர்ப் பிரவாகத்திலே எல்லாவற்றையும் போக்கடித்து விடுவேனே என்றுதான் துயரப்படுகிறேன்... அது கிடக்கட்டும். ஒன்று கேட்கிறேன். பதில் சொல்வாயா? இராச்சியம் இராஜபோகம் முதலிய எல்லாவற்றையும் கைவிட்டு நானும் நீயுமாகக் காட்டுக்கு ஓடிப்போய்ச் சாதாரண வேடுவர்களைப்போல் வசிப்போம். சம்மதமா?

குவனு: இதென்னகேள்வி? விட்டு ஓடிப் போவதற்கா இவ்வளவு சிரமப்பட்டு இந்த இராச்சியத்தைச் சிருஷ்டித்தீர்கள்? அப்படி எல்லாவற்றையும் துறந்து போகவேணும் என்ருல் என்னைக் கேட்பானேன். நான் தங்கள் அடிமையன்ருே? ஆனுல் அப்படி ஓடிப் போகும்படி என்ன வந்தது.

**சரித்திர நாடகம்**

விஜய: ஒன்றும் வரவில்லை......

குவனு: ஏன் கேட்டீர்கள்.

விஜய: ஏதோ தோன்றிற்று, கேட்டேன்.

குவனு: ஆனுல் இன்று தாங்கள் மறைபொருளாகப் பேசுகிறீர்கள். தாங்களாகச் சொல்லாததை நான் வலிந்து கேட்கமாட்டேன். இருந்தும், என் மனம் சஞ்சலத்தில் ஆழ்கின்றது...

விஜய: என் மூதாதையர்கள், வயது வந்தவுடன் இராச்சியத்தை மைந்தரிடம் ஒப்புவித்துவிட்டுத் துறவை மேற்கொள்வது வழக்கம். அதன்படி....

குவனு: அதற்கு உங்கள் மகன் இராச்சியபாரம் தாங்கக்கூடிய பராயத்தை இன்னும் அடையவில்லையே. அதுவரையும்....

விஜய: மகன், அவன் இராச்சியம் ஆழ்வனே...? ஆமாம் நீ சொல்வதும் சரி.

—திரை—

### காட்சி 19

இடம்: அரண்மனையில் அரசனுடைய பிரத்தியேக அறை.
காலம்: காலை.

[விஜயனும் கருணுமித்தனும் சிந்தனையில் லயித்து உட்கார்ந்திருக்கின்றனர். சிறிது தூரத்தில் ஒரு பாடகி வீணையுடன் இணைத்துப் பாடிக்கொண்டிருக்கிளுள்.]

விஜய: [பெருமூச்செறிந்து] அப்புறம்?

கருணு: அப்புறம் என்ன! உன்னுடைய தீர்க்கமான முடிவுமட்டும் வேண்டியிருக்கிறது.

விஜய: முடிவுதான் அன்றே தெரிவித்து விட்டேனே. எனக்குப் பட்டாபிஷேகம் வேண்டாம். பட்டாபிஷேகம் இல்லாததனுல் அரசபதவியை இழந்துவிடப் போவதுமில்லை.

கருணு: இவ்வளவுதானு உன்னுடைய மனுே திடம். ஒரு பெண்ணுடன்—அதுவும் இயக்கப் பெண்ணுடன்—பேசி இணங்கச் செய்வதற்கு இவ்வளவு தூரம் அஞ்சுகின்ருயே.

விஜய: இயக்கப் பெண் என்ருலும் அவள் என்னுடைய மனைவி—அவள் மனம் நோகும்படி எதுவும் சொல்லவோ செய்யவோ என்மனம் துணியவில்லை. பெண்களைப் பற்றிய அனுபவம் எதுவும் இல்லாத உனக்கு இவை எல்லாம் மிக எளிதாகவே தோன்றும். அதனுல் இப்படி நெஞ்சிரம் இன்றிப் பேசுகின்ருய்.... ஆ! அவளுடைய மகன் பட்டத்துக்கு உதவான் என்ற கொடிய வார்த்தையை ஒரு தாயின் செவியில் எப்படி நான் பேசுவேன்... உன்னுடைய இராஜநீதி நூல்களை எங்கே அவள் விளங்கிக்கொள்ளப்போகிருள்...அத்துடன் என்மனமும் ஒப்பவில்லையே...

கருணு: விஜய, கூறியதையே திருப்பித் திருப்பிக் கூறுவதில் பயன் ஒன்றும் இல்லை. உனக்குப் பின் பட்டத்துக்குத் தகுதியான புத்திரனைத் தோற்றுவிப்பது, நீ இத்தேசத்துக்குச் செய்ய வேண்டிய பெரும் தொண்டு. அந்தத் தொண்டில் ஒரு பெண்ணின் நெஞ்சு புண்பட்டு விடுமே என்று எண்ணுவது தர்மம் அன்று தேச பக்தியும் அன்று. பாண்டியனுக்கு அவன் மகளை உனக்கு மணம் பேசித் தூது போக்கிவிட்டேன். குவனு பட்ட மகிஷிஸ்தானத்தை அவளுக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

விஜய: கொடியாய்! என்னசெய்தாய்?

கருணு: இனி நானே குவனுவிடம் பேசுகின்றேன். அவள் உடனே மனப்பூர்வமாக இணங்குவாள் என்று என்மனதிற் படுகிறது...உனக்காக அவள் எதையும் செய்யத் தயங்கமாட்டாள்.

விஜய: எனக்காக நான் ஒன்றும் கேட்கவில்லையே....

கருணு: அத்துடன் தங்களைத் தியாகம் செய்துகொள்வது அல்லது தியாகம் செய்துகொள்வதாக நினைத்து நடப்பது, சில பெண்களுக்கு மிக உவப்பான கருமம். அவர்களுக்கு அது ஆத்ம திருப்தியைக் கொடுப்பதாகும். குவனு இருக்கின்ருளே, அவள் அவ்வர்க்கத்தைச் சேர்ந்தவள்...

[போகிருன்]

விஜய: பாவி, உன் மனம் அப்படி என்ன இரும்போ?

—திரை—

### பதுளை சைவபரிபாலன சங்கம்

சமய பாடப் பேச்சுப் போட்டித் தெரிவு சென்ற 17, 18, 19-ம் திகதிகளில் தருமதூதக் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்தது. ஸ்ரீமான்கள் கே. வீ. நடராசா எம். பி. எஸ். எஸ். நம்பிசை, எஸ். கே. சண்முகம்பிள்ளை ஆகிய மூவரும் நடு நிலையாளராகக் கடமையாற்றினர். தருமதூதக் கல்லூரி, செனற் பீட்டர்ஸ் கல்லூரி, ஊவாக் கல்லூரி, பசறை அரசினர் தமிழ்ப் பாடசாலை ஆகிய கலாசாலைகள் மூலமாகவும், பிரத்தியேகமாகவும், ஆண்களும் பெண்களுமாக 60 பேர் போட்டியிற் பங்குபற்றினர். அவர்களுள் 9 பேர் முஸ்லீம்கள்; 3 பேர் கிறீஸ்தவர்; ஏனையோர் இந்துக்கள்.

போட்டித் தெரிவின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் புறம்பாக 1ம் 2ம் பரிசாகப் புத்தகங்களும், எல்லாரினும் விசேடமானவருக்குத் தங்கப் பதக்கமும், பெண்களில் விசேடமானவருக்கு வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படும். கடைசிப் போட்டி 4-12-48 ல் நடைபெறும்.

—கடிதம்

### ஒரே இரவில் 10 குழந்தைகள்

வலல்முல்ல வைத்திய சாலையிலுள்ள சிறிய பிரசவ நிலையத்தில் ஒரு இரவிற் பத்துக் குழந்தைகள் [illegible] கட்டில்களே உண்டு. இது சென்றவாரம் நடைபெற்ற சம்பவம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிழல்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் சந்தோஷம் தாங்க முடியாமல் ஆகாயத்தை நோக்கிக் கால்களை உயர்த்துவேன். அவளும் தன் சந்தோஷத்தைச் சிரிப்புமூலம் வெளிப்படுத்துவாள். ஒருமுறை அவள் ஊஞ்சலில் ஏறி ஆடினுள்; நான் ஆட்டினேன்; ஆட்டம் கூடக் கூட அவள் மனதில் பயமும் கூடியிருக்கவேண்டும். "ஐயோ, பயமாயிருக்கே" என்று கத்திவிட்டாள். பழக்கத்தினுலேதான் பயந்தீரலாம்; அது தீரவில்லை அவளுக்கு· அதன்பின் அவள் ஊஞ்சலிலாட முன் வரவில்லை. பயம் அவளின் ஆசைக்கு அரண் போட்டிருந்தது. அவள் என்னை ஆட்டுவதிலேதான் ஆனந்தமடைந்திருக்க வேண்டும், சலிப்பின்றி ஆட்டினுள். குழந்தைகளின் கற்பனை விசித்திரமானதாக இருக்கலாம். ஆனுல் அதுதான் பிற்காலக் கவியுள்ளத்தின் அஸ்திபாரம். நான் ஆனந்தமயமான என்னுல் சிருஷ்டிக்கப்பட்ட கற்பனையுலகில் சஞ்சரித்தேன்.

"எடேமணி, இங்கே வாடா" என்று குரலொன்று முழங்கியது, வெடி குண்டைப்போலே. என் கற்பனை யுலகம் பொடிப் பொடியாகச் சிதறியது. அந்தச் சிதறல்களின் சின்னமாக என் கண்கள் கண்ணீரை விட்டன. குழந்தைகள் துன்பங்களை எதிர்ப்பதற்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஆயுதம் அது.

அவள் ...? அவள் எப்போதோ பறந்து விட்டாள்!

அடுத்த இடி இடித்தது. என் தந்தை கோப முழக்கம் செய்தார்.

"வாடா என்ருல் வா, மடைப் பயல்" என்று ஒவ்வொரு சொற்களும் கோப விருக்ஷத்தின் பழுத்த பழங்கள்.

## (3)

இன்னெரு சாயையை மனவேடு புரண்டு காட்டியது:

தானே கடவுளென்ற மமதை பிடித்த ஹிரண்யன்முன், பக்தி நிறைந்த உள்ளமுடைய பிரகலாதன் நின்ருன். சமூகத்தின் விஷ குணங்கள் சூறையாடிய மனதின் முன், அப்பழுக்கற்ற பிஞ்சு மனம் நின்றது. நானும் என் தந்தைமுன் நின்றேன். அந்த அநாதரவான நிலையில் அந்த முருங்கை மரந்தான் உதவி செய்தது; விழுந்துவிடாமல் காப்பாற்றியது.

"அடே, உனக்கு இவ்வளவு துணிவோடா" என்று கத்தினுர் என் அப்பா. நான் பதில் பேசவில்லை; 'ம் ... ம் ... ம்'... என்ற அழுகைச் சத்தந்தான் பதில் சொல்லிற்று. இப்படியான சந்தர்ப்பங்களில் அது தான் பதில் சொல்லுமோ?

"விளையாட்டாம் விளையாட்டு. அதுவும் அவளோடு யாரடா விளையாடச் சொன்னது" என்று பல்லை நெருடினுர். பயத்துடன் என்வாய் நடுங்கியது. "நான்தான் அப்பா" — என்று

"ம் ... ம் ... ஊரிலுள்ள பள்ளர் பறையர் எல்லாரையும் அழைத்துவைத்து விளையாடப் போருனும். இனி என்ன, மானம் கப்பல் ஏறியமாதிரித்தான். ...குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு ... இதுதானே பிள்ளை வளர்க்கிற இலட்சணம்" என்று கத்தினுர், என் தாயைப் பார்த்து. ஒரு குறியை நோக்கிச் சென்ற பாணம், வேருரு திசைக்குப் பாய்ந்தது. பாவம்! என் அம்மா ஒன்றும் விளங்காமல் விழித்தாள்; ஒரு ரசமான தொடர்கதையின் பின் பகுதிதானே அவளுக்குக் கிடைத்தது!

"பாவம், குழந்தைதானே அதற்கென்ன தெரியும், இனிமேல் செய்யமாட்டான்; சொன்னுல்தானே தெரியும்" என் அம்மாவின் மனதிலுள்ள தாய்மை எனக்காக அப்புக்காத்து வேலைபார்த்தது.

"சொல்லித் தெரியவேணுமாம் சொல்லி. இவன் மூளைக்கென்னவாம். பள்ளி பறைச்சியைத் தொடுவது; கைகோர்த்து ஊஞ்சலாடுவது. குலமென்ன?... கோத்திரமென்ன? ... இவனை நொறுக்கி ..." அப்பாவின் மனதைப் பற்றியிருந்த விஷசர்ப்பங்கள் அத்தனையும் ஒரே சமயத்தில் சீறின. பற்கள் நறநறத்தன; கண்கள் ரத்தமாயின. என் பிஞ்சு மனதைப் பயம் பொடிப் பொடியாக நொறுக்கி விட்டது; நான் ஓலமிட்டேன்.

"அப்பா ... கும்பிடுகிறேன்... இனி...மேல..." என்னுல் அது தான் முடிந்தது. ஒரு முரடனின் மூர்க்கம் ஒரு சாதுவிடத்தில்தான் தன் வலிமையைக் காட்டும். என் அப்பாவின் அதிகாரம், அவர் மகன் என்றதோரணையில் என்னில் பிரயோகிக்கப்பட்டது.

"ஞாபகமிருக்கட்டும் ... ம் ... ம் ..." என்ற வார்த்தைகளுடன் நாலு அறைகள் என் முதுகில் விழுந்தன. என்னுல் தாங்கமுடியவில்லை; விழுந்துவிட்டேன். அம்மாதான் என்னைத் தூக்கியிருக்கவேண்டும்; கண்விழித்த போது அவள் மடியில்தான் கிடந்தேன், பழுத்த மரத்தைப் பெலமாக உலுக்கினுல் பழங்கள் உதிர்வது இயல்புதானே. அறையின் அதிர்ச்சி என் மனதையும் உலுக்கியது; கடந்த சம்பவப் 'பழ'மொன்று உதிர்ந்தது.

'அன்று நான் அடித்த பந்து ஏன் வேறு ஒரு இடமும் போகவில்லை? ஏன் நேராக அடுத்த வளவுக்குப் பறந்தது? நான் பந்தை எடுக்க ஓடினேன். என்ன ஆச்சரியம்! என் அப்பா அங்கேயிருந்தார்! இதை நான் கனவிலும் எண்ணவில்லை. சற்றுமுன் வீட்டிலிருந்தாரே குளித்துவிட்டு, மேல் சாதியான் என்ற செருக்குடன் அநுட்டானங்களை முடித்துவிட்டு, சந்தனமும் குங்குமமுமிட்டு, கடவுள் என்ற அறியாத வஸ்துவைச் சிறைப் பிடித்தாரே. இப்பொழுது இங்கு எப்படி வந்தார்? ஏதாவது அலுவலிருக்கலாம் ... இல்லை, இல்லை ... அது என்ன அப்பாவின் கையில், பனையோலையால் செய்த ஒன்று, ஆம்; அம்மா எப்போதோ சொன்னவள் அதற்குப் பெயர் 'புழா' வாம். அப்பா வாயில் வைத்து ஏதோ குடிக்கிருரே, என்ன கள்ளோ? ... என்ன ... என் அப்பாவா குடிக்கிருர்? நான் நிற்கவில்லை ஓடிவிட்டேன். இன்று நான் என்ன குற்றஞ் செய்தேன்? அப்பா அன்று என்ன குற்றஞ் செய்யவில்லை? நான் இன்று வள்ளியோடு விளையாடியதைக் குற்றமென்று அப்பா தீர்ப்புக்கூறிவிட்டார். அப்பா செய்த குற்றத்துக்குத் தீர்ப்பு?

என்மனத்தராசு என் 'குற்றம்' என்று சொல்லப்பட்டதை மிதத்தியே காட்டியது; ஆனுல் அப்பாவின் பங்கு தாழ்ந்துவிட்டதே.

"டக் ... டக் ... டக் ..."

வாசல் கதவை யாரோ தட்டினுர்கள். ஊகித்தறிவதிலேதான் மனிதனுக்கு எவ்வளவு கவர்ச்சியுண்டு. மனம் 'யாராயிருக்கலாம்' என்ற கேள்வியைக்கேட்டு, 'அவன்தான், வேறுயாராயிருக்கும்' என்று விடையும் சொல்லிக்கொண்டது. நான் கதவைத் திறக்கவில்லை; மனம் விடைகொடுத்தால் தானே; அது தன் சுவடியை மூடிப் பத்திரப்படுத்திக் கொண்டது; யாராவது பார்த்துவிடுவார்கள் என்ருே என்னவோ? மீண்டும் அது 'அவன், அவன்' என்று சொல்லிக்கொண்டு வேருரு சாயையைக் காட்டியது; நினைவு பார்த்தது. (தொடரும்)

## கம்பளைத் தேர்தல் வழக்கு தள்ளுப்பட்டது

கம்பளைப் பிரதிநிதி ஸ்ரீ ஆர். எஸ். பெல்பொல என்பவருடைய தேர்தலை ஆட்சேபித்து திரு. பி. எல். [illegible] சில்வா என்பவரால் [illegible] பட்ட வழக்குச் செலவுடன் தள்ளப்பட்டது.

## யாழ்ப்பாணத்துச் 'சிகரெட்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிற் பக்குவமாக்கும் வேலையையும் இயந்திரமே செய்து முடிக்கின்றது. இந்தப் புகையிலையிலும்பார்க்க ஹரிஸன் ஸ்பெசல் என்ற ரகப்புகையிலையே மிகச் சிறந்ததெனத் தெரிகின்றது. இதனை யாழ்ப்பாணத்துக் கமக்காரர்கள் போதியளவு பயிர் செய்வார்களாகில் அதற்கு நல்ல மானம் இருக்குமென்பது திண்ணம். ஆகவே, இதில் ஆர்வமுள்ள கமக்காரர்கள் குறித்த சிகரெட் நிலையத்துக்குச் சென்று இதுபற்றிய சகல விபரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

இங்கு தயாராகப்படும் சிகரட்டின் பெயர் **பார்மேஸ் பரடைஸ்** (Farmer's Paradise) என்பது. கமக்காரரின் சுவர்க்கலோகம் என்று தமிழிற் கூறலாம். இதன் மணக்குணம் இன்னும் சிறப்படையிடமிருக்கின்றது. இத்தனைக்கும் இலங்கை மக்களின் ஆதரவே அத்தியாவசியமாகும்.

## அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாடற் புராணம் இவற்றுள் ஒன்று. நேரம்: 6 நிமிஷம்.

**2. மத்திய பிரிவு:** (பதினுறு வயது வரை)

1. சிவசின்னங்கள், 2. சிவதீட்சை, 3. உற்சவங்கள், 4. சேக்கிழார், 5. பெரியபுராணம், 6. அடியார் பெருமை இவற்றுள் ஒன்று நேரம்: 8 நிமிஷம்.

**3. மேற்பிரிவு:** (பதினுறுவயதுக்கு மேல்)

1. புராணங்கள், 2. குருபூசை, 3. சிவஞான முனிவர், 4. கச்சியப்ப சிவாசாரியார், 5. கந்தபுராணம், 6. சைவக் கிரியைகள். இவற்றுள் ஒன்று. நேரம் 10 நிமிஷம்.

### புராணபடனம்

மாணவர் எவரும் பங்கு பற்றலாம், ஒவ்வொருவருக்கும் பயன்சொல்லவும் படிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும். திருவாதவூரடிகள் புராணம், திருவடி பெற்ற சருக்கம்.

**குறிப்பு:**— திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி, பஞ்சாக்கரப் பதிகம், நமச்சிவாயப் பதிகம் திருநீற்றுப்பதிகம், என்னும் பதிகங்களில் முதலினும் ஈற்றினும் வரும் தேவார திருவாசகங்களை மனனஞ் செய்தாற் போதுமானது. மேற்படி பதிகங்களுள், வரும் ஏனைய திருப்பாடல்களைப் பண்ணுடனும், தாளத்துடனும் பார்த்துப் பாடக் கூடியவாறு ஆயத்தஞ் செய்தல் வேண்டும்.

**வே. சங்கரப்பிள்ளை**
காரியதரிசி.

விழிசிட்டி, தெல்லிப்பழை
18-11-48

## மேஜர் ஜயவர்த்தன வெற்றி
### கொழும்புப்பகுதி உபதேர்தல்

தென் கொழும்புப் பகுதி உபதேர்தல் இம்மாதம் 20-ந் திகதி நடைபெற்றது. இதில் யூ. என். பி. அபேட்சகர் மேஜர் ரீ. எவ். ஜயவர்த்தன 1,144 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்ருர். விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| மேஜர் ரீ. எவ். ஜயவர்த்தன | 5 997 |
| ஸ்ரீ பி. சரவணமுத்து (சுயேச்சைப்பொதுவுடமை) | 4,853 |
| ஸ்ரீ பேணுட் சொய்சா (பொல்ஷிவிக் லெனிஸ்ட்) | 4,208 |
| டொக்டர் ஏ. பி. டி. சொய்சா (சுயேச்சை) | 260 |
| [illegible] | [illegible] |

டொக்டர் சொய்சா [illegible] கட்டுப்பணத்தையும் இழந்தனளார்.

The EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION
Vol. 19 | Chunnakam, Sunday, Nov. 28, 1948 | No. 19

## வெளுத்து வாங்கினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மந்திரி சுந்தரலிங்கம்

தேங்காய்த் துருவல்போன்ற தென்னைப் பொருள்களுக்கு அரசாங்கம் ஏற்றுமதித்தீர்வை உயர்த்தியுள்ளது. இதைச் சிலர் துருவித் துருவி ஆராய்ந்துள்ளனர். இது காரணமாக அவ் வியாபாரத்தில் ஈடுபட்டுழைப்பவர்களுக்கு அரசாங்கத்தின்மீது கோபம் ஏற்படுவது இயல்புதான். ஆகவே, நியமன அங்கத்தினர் இருவர் வியாபார மந்திரியுடன் சண்டைக்குக் கிளம்பினர் ஆனுல் மந்திரி சுந்தரலிங்கம் அவர்களுக்கெல்லாம் தக்க பதில் கூறித் தமது கட்சியில் நியாயமிருக்கின்றதென்பதை நிலைநாட்டிவைத்தார்.

மந்திரி கொத்தலாவல 1947-ல் வேலைநிறுத்தம் செய்தவர்களைப் பற்றிப் பேசும்போது வெகு ஜாக்கிரதையாகவே பேசினுர். கலரியில் இருந்த சர்வதேசத் தொழிற் சங்கத்துப் பிரதிநிதிகள் தமது பேச்சைக் கவனமாகக் கேட்பார்கள் என்ற எண்ணந்தான் மந்திரியை இப்படிச் சாவதானமாகப் பேசச் செய்திருக்கவேண்டும்.

### எலும்பும் மயிரும்

சபையில் அன்று சுவையான விஷயங்களும் அம்பலமாயின. ஒரு பிரதிநிதி ஒரு கடதாசிக் கட்டைக் காட்டி அதற்குள் இருந்த பசளையைப் பற்றிக் குறிப்பிட்டார். எலும்பினுல் தயாரிக்கப்படும் அப்பசளையை அரசாங்கம் கமக்காரர்களுக்கு உதவுகின்றதெனவும், ஆனுல் அதற்குள் 'பாபர் சாய்ப்பு'க் குப்பையுங் கஞ்சலுமே இருப்பதாக அவர் தமாஷாகக் கூறினுர். ஆகவே, அது பசளையாக மாட்டாதென்பது அவருடைய அபிப்பிராயமாகும்.

அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் வயதேறிய மாணவர்களைச் சேர்க்கக் கூடாதென ஒரு சட்டம் பிறந்துள்ளது. இது பற்றியும் இலங்கை றப்பரைப்பற்றியும் பேச்சுகள் எழுந்தன. ருஷியாவுக்கு இலங்கை றப்பர் கிடைக்கமாட்டாதென்பது நன்கு புலனுகின்றது.

### மந்திரி பொன்னம்பலம்

ஐரோப்பாவில் யாத்திரை செய்த மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் செவ்வாய்க்கிழமை மாலை விமானமூலமாக நீர்கொழும்பு வந்தடைந்தார். ஐரோப்பாவிலுள்ளநாடுகள் தொழிற்றுறையில் அதிக முன்னேற்றமடைந்திருப்பதாகவும் இலங்கை அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு முன்னேற வேண்டுமெனவும் அவர் வற்புறுத்தினுர். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் தொழில் முறைகளும் அபிவிருத்தி யடைந்தாற்ருன் கொம்யூனிஸ்ட்டுகளின்பீதியை முறியடிக்கலாமென மந்திரி பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

### நாவலர் குருபூசை

கொழும்பு விவேகானந்த சபை வருகிற ஞாயிற்றுக் கிழமை (28-11-48) **ஆறுமுக நாவலர்** குருபூசையைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டம் போட்டிருக்கின்றது. பூசை, ஆராதனை, சொற்பொழிவுகள் இன்னிசைபோன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற விருக்கின்றன. தமிழறிஞர்கள் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்போகின்றனர். சமீபத்தில் யோகி சுத்தானந்தபாரதியார் **நாவலர் பெருமான்** என்ற அரியதோர் நூலைஎழுதி வெளியிட்டார். இதற்காக சுத்தானந்தபாரதியார் அவர்களுக்கு நாவலர் குருபூசை விழாவின் போது அதே மேடையில் தமிழ் மக்களின் சார்பாக நன்றியும் தெரிவிக்கப்படுமென அறிகின்றேன். இது அநேகருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

### தேவை

அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திற்கு 1-1-49 தொடக்கம், தராதரப் பத்திரம் அல்லது தகுதிகாண் ஆசிரிய தராதரப் பத்திரமுள்ள ஓர் ஆசிரியை தேவை. ஆங்கில, சங்கீத அறிவுடையோர் விசேட கவனம் பெறுவர். விண்ணப்பங்கள் 10-12-48-ற்குள் ஷெ பாடசாலை முகாமைக்காரருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

[3559]

**பள்ளிக்கூடத் தேவைக்கான:**

| | | |
|---|---|---|
| தினவரவு இடாப்பு | — | 1-50 |
| லீவு " | — | -50 |
| 'Q' செடுல் சேட்டிபிக்கற் புத்தகம் | | 1-00 |
| தவணைப்பரீட்சை இடாப்பு (சிறியது) | | 2-50 |
| " (பெரியது) | | 3-50 |

விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

**சுன்னுகம்: தனலக்குமி புத்தகசாலை**

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலயம் நா. பொன்லையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1948-ம் ஆ நவம்பர் மீ 28உ ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org